# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2031 கார்த்திகை 30 வெள்ளிக்கிழமை (15-12-2000)UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:19


## கப்பலில் பொருள் ஏற்றும் யாழ்.வர்த்தகர்கள் கட்டணத்தைக் குறைக்கக் கோரி போராட்டம்!

கொழும்பு,டிசெ.15

குடாநாட்டுக்கு அத்தியாவசியப் பொருள்களை ஏற்றிச் செல்லும் கப்பல்களின் கட்டணத்தைக் குறைக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்துப் போராட்டம் ஒன்றை யாழ்ப்பாணத்துக்கு கப்பலில் பொருள் ஏற்றும் வர்த்தகர்கள் ஆரம்பித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்துக்கு கப்பலில் பொருள் ஏற்றும் வர்த்தகர்கள் சங்கம் நேற்றுமுன்தினம் கூடி எடுத்த தீர்மானத்துக்கு அமைய இந்தப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அங்கு நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் விவரம் வருமாறு:-

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு பொருள் ஏற்றும் கப்பல் நிறுவனங்களான மேர்கண்டையில் சிப்பிங் நிறுவனம், வலிவில் லங்கா லிமிட்டெட், அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் திணைக்களம் ஆகியவற்றின் கப்பல்களில் ஒரு மெற்றிக் தொன்னுக்கு அல்லது ஒரு சி.வி.எம்முக்கு கட்டணமாக இலங்கை நாணயப்படி 2 ஆயிரத்து 400 ரூபா அறவிடவேண்டும்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## பாவனைக்கு உதவாத அரிசி குறித்துப் பூரண விசாரணை

### யாழ். அரச அதிபர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.15

சுன்னாகம் மற்றும் தெல்லிப்பழை ப.நோ.கூ. சங்கங்களின் கிளைகள் மற்றும் களஞ்சியங்களில் இருந்து மனித பாவனைக்கு உதவாத அரிசி சுகாதாரப் பகுதியினரால் கண்டுபிடிக்கப்பட்ட சம்பவத்தை அடுத்து -

இது தொடர்பாக பூரண விசாரணை நடத்தப்பட இருக்கின்றது என்று யாழ். அரச அதிபர் க.சண்முகநாதன் தெரிவித்தார்.

தற்சமயம் கண்டுபிடிக்கப்பட்ட மனித பாவனைக்கு உதவாத அரிசி யாழ்.செயலகத்தால் வழங்கப்பட்டதா? அல்லது ப.நோ.கூ. சங்கத்திற்கு உரியதா? என்பது குறித்தே இந்த விசாரணைகள் மேற்கொள்ளப்படவிருப்பதாக அவர் மேலும் சொன்னார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நிவாரணம் வழங்குவதற்காக அரச களஞ்சியங்களில் இருந்து அரிசியைப் பெறும்போது அவை மனித பாவனைக்கு ஏற்றதா என்பதை பரிசோதித்து எடுக்குமாறு ப.நோ.கூ.சங்கங்களுக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளோம்.

அவ்வாறு எடுத்துச் செல்லப்பட்ட அரிசி சங்கக் களஞ்சியங்களில் பழுதடைந்தமை கண்டுபிடிக்கப்பட்டால் அவற்றை செயலக களஞ்சியத்தில் மீள ஒப்படைத்து தரமான அரிசியைப் பெறுவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த நிலையில் இத்தகைய தவறு எவ்வாறு ஏற்பட்டது. என்பது தெரியாமல் உள்ளது - என்றார்.

(இ-3-5)

# தமிழர்களின் அவலம் நீங்க நோர்வே உதவ வேண்டும்!



## நோர்வேத் தூதுவரிடம் யாழ்.ஆயர் கோரிக்கை

யாழ்ப்பாணம்,டிசெம்பர்15

**இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண இறுதி சந்தர்ப்பம் ஒன்று தற்சமயம் ஏற்பட்டுள்ளது. இதனைப் பயன்படுத்தி தமிழ் மக்களின் அவலங்களுக்கு முடிவு காண நோர்வே உதவ வேண்டும்.**

**நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ்ட் பேர்க்கிடம் யாழ்.ஆயர் அதிவண. தோமஸ் சௌந்தரநாயகம் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளார்.**

நோர்வேத் தூதரகத்தில் நேற்று முன்தினம் அவரைச் சந்தித்த யாழ். ஆயர் தமிழ் மக்களின் அவல வாழ்க்கையை விளக்கமாக எடுத்துக் கூறினார்.

இடம்பெயர்ந்த மக்கள் படும் இன்னல்களையும், மக்கள் மத்தியில் நிலவும் பயம், பீதியையும் ஆயர் நோர்வேத் தூதரிடம் கூறினார்.

நோர்வே மூலம் தீர்வு எட்டக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இதுவே இறுதியான சந்தர்ப்பமாகவும் இருக்கலாம்.

இந்த முயற்சிகளுக்கு நோர்வே அழுத்தம் கொடுத்து அரசும் - விடுதலைப் புலிகளும் பேச்சுக்களை ஆரம்பிக்க உதவ வேண்டும் என்று

(12ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியில் பிரபாவை ஆயர் சந்திக்கவில்லை

யாழ்ப்பாணம்,டிசெ.15

வன்னியில் இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசத்திற்கு விஜயம் செய்த போதும் விடுதலைப் புலிகள் தலைவர் வே.பிரபாகரனைச் சந்திக்கவில்லை என்று யாழ்.ஆயர் அதிவண. தோமஸ் சௌந்தரநாயகம் உதயனுக்குத் தெரிவித்தார்.

நேற்று யாழ்ப்பாணம் திரும்பிய யாழ்.ஆயர் இது குறித்து மேலும் தெரிவித்ததாவது:-

சமாதான முயற்சிகளுக்கு விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் ஆதரவு வழங்க முன்வந்ததை வரவேற்று அவருக்கு கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தேன்.

வன்னி சென்ற சமயம் அந்தக் கடிதம் அவருக்குக் கிடைத்துள்ளது என்பதை உறுதி செய்தேன். அதன் காரணமாக அவரைச் சந்திக்க நான முயற்சிக்கவில்லை.

தற்சமயம் சமாதானத்தை எட்டுவதற்காக உருவாகியுள்ள சூழ்நிலையை சரியான முறையில் பயன்படுத்துமாறு ஐ.தே.க.தலைவர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர் றொனி டிமெல் போன்றவர்களிடமும் மற்றும் முக்கிய தலைவர்களிடமும் நேரடியாகக் கோரினேன்.

சமாதான முயற்சிக்கு ஆதரவு பெறும் நோக்கத்துடன் இந்த விஜயம் அமைந்திருந்தது - என்றார். (இ-3)

## படையினருக்கு அமெரிக்கா பயிற்சி

கொழும்பு,டிசெ.15

இலங்கை இராணுவத்தினருக்கும், பொலீஸாருக்கும் மனித உரிமைகள் தொடர்பான பயிற்சியை வழங்கப்போவதாக அமெரிக்க அரசாங்கம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகம் அறிக்கை ஒன்றையும் விடுத்துள்ளது.

இந்தப் பயிற்சி நெறியில் இராணு

(12ஆம் பக்கம் பார்க்க)



## மட்டக்களப்பில் துண்டுப்பிரசுரம்

மட்டக்களப்பு,டிசெ.15

படையினர் செல்லும் வாகனங்களில் பயணம் செய்ய வேண்டாம் என்று பொதுமக்களைக் கோரும் துண்டுப்பிரசுரங்கள மட்டக்களப்புப் பகுதியில் விநியோகிக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பில் மீட்கப்படாத பகுதிகளில் நிலைகொண்டுள்ள இராணுவ முகாம்களுக்கு மிக அருகில் இருக்கும் மக்களை விலகி இருக்குமாறும் அந்தத் துண்டுப்பிரசுரத்தில் கோரப்பட்டுள்ளது. (இ)

## யாழ்.மேயராக ரவிராஜ்; பிரதி மேயர் கந்தையன்

கொழும்பு,டிசெ.15

யாழ்.மாநகர மேயராக என். ரவிராஜ் நியமிக்கப்பட்டுள்ளார் என்று தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

வெற்றிடமாகவுள்ள யாழ்.மேயர் பதவிக்கு என்.ரவிராஜின் பெயர் சிபார்சு செய்யப்பட்டுள்ளதாகவும் - விரைவில் அது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வெளியாகும் என்றும்- தெரிவிக்கப்பட்டது.

என். ரவிராஜ் மேயராகப் பதவியேற்றதும் பிரதி மேயராக கந்தையன் நியமிக்கப்படவிருப்பதாகத் தெரியவந்தது.

(இ-3)

## 'சிற்றி ஒவ் றிங்கோ' கட்டணம் உயர்ந்தது!

திருகோணமலை,டிசெ.15

வடபகுதிக்கான பயணிகள் போக்குவரத்தில் ஈடுபடுத்தப்பட்டிருக்கும் "சிற்றி ஒவ் றிங்கோ" கப்பலின் பயணக்கட்டணம் 400 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதுவரை கப்பல் கட்டணமாக ஆயிரம் ரூபா அறவிடப்பட்டிருந்தமை தெரிந்ததே. இனி ஆயிரத்து 400 ரூபா அறவிடப்படும்.

இதற்கிடையில் -

மேற்படி கட்டணம் தொடர்பான "பக்ஸ்" செய்தி ஒன்று நேற்றுக் காலை திருமலைப் பிரதேச செயலருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (இ-7)

## பரீட்சை மண்டபப் பாதுகாப்புக்குச் சென்ற பொலீஸார் மீது கிளைமோர்த் தாக்குதல்!

### ஏறாவூரில் 3 பொலீஸார் உட்பட ஐவர் பலி

கொழும்பு,டிசெ.15

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏறாவூர் கலைமகள் மகா வித்தியாலயத்துக்குப் பரீட்சைப் பாதுகாப்புக் கடமைக்குச் சென்ற பொலீஸ் குழுவினர் நேற்றுக் காலை 9 மணியளவில் கிளைமோர்த் தாக்குதலுக்கு உள்ளாகினர். இந்தச் சம்பவத்தில் 3 பொலீஸார் உட்பட ஐவர் உயிரிழந்தனர் என்றும் -

உயிரிழந்த மற்றைய இருவரும் கணவன் - மனைவி என்றும் விசேட ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்தது.

ஏறாவூர் கலைமகள் மகா வித்தியாலயத்தில் ஜி.சீ.ஈ. (சாதாரண தர) பரீட்சை நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது.

அந்தப் பரீட்சை நிலையத்துக்கு பாதுகாப்பு வழங்குவதற்காக பொலீஸ் குழு ஒன்று சென்றுகொண்டிருந்தது.

அந்தக் குழுவே கிளைமோர்த் தாக்குதலுக்கு இலக்கானதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்தச் சம்பவத்தில் 4 பொலீஸார் காயமடைந்தனர். அவர்களிலேயே மூவர் பின்னர் ஆஸ்பத்திரியில் உயிரிழந்தனர்.

இந்தச் சம்பவத்தில் சிக்கி மூன்று பொதுமக்கள் காயமடைந்து மட்டக்

(12ஆம் பக்கம் பார்க்க)

## பல்கலைக்கழக மாணவர் 2 மணிநேரம் பகிஷ்கரிப்பு

### இராணுவ சோதனை நிலையத்தை அகற்றக் கோரி

யாழ்ப்பாணம்,டிசெ.15

யாழ்.பல்கலைக்கழகத்திற்குச் சமீபமாக - பரமேஸ்வராச் சந்தியில் அமைக்கப்பட்டுள்ள இராணுவ சோதனை நிலையத்தை அங்கிருந்து அப்புறப்படுத்துமாறு கோரி பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று இரண்டு மணிநேரம் தமது வகுப்புகளைப் பகிஷ்கரித்தனர்.

மாணவர்களின் பகிஷ்கரிப்புப் போராட்டத்தையடுத்து பல்கலைக் கழகத்தின் சகல வகையான செயற்பாடுகளும் இரண்டு மணிநேரம் தடைப்

(12ஆம் பக்கம் பார்க்க)

# மற்றும் ஒருவருக்கு டெங்கு அறிகுறி!

டெங்குக் காய்ச்சல் என சந்தேகிக்கப்படும் மேலும் ஒரு நோயாளி யாழ்.ஆஸ்பத்திரியில் இனங்காணப்பட்டுள்ளார்.

அராலி வடக்கைச் சேர்ந்த ஜெயகாந்தன் சித்திரா (வயது 27) என்பவரே இந் நோயாளி ஆவார்.

கடந்த 6 ஆம் திகதி காய்ச்சல் தொடங்கியதாகவும், காய்ச்சல் தீவிரமடைய 9 ஆம் திகதி யாழ்.ஆஸ்பத்திரியில் இவர் அனுமதிக்கப்பட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

சிகிச்சை பெற்றுவரும் இவருக்கு தற்போது டெங்குக் காய்ச்சலுக்கான அறிகுறிகள் இருப்பதாகவும் அதற்கான மேலதிக இரத்த பரிசோதனை செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரி விக்கப்படுகிறது.

இவருடன் இதுவரை 6 பேருக்கு டெங்குக் காய்ச்சலுக்கான அறிகுறி இருந்து வருகிறது. (இ-15)

## இலவச மருத்துவ பரிசோதனை

யாழ். லயனஸ் கழகமும் தீவக லயன்ஸ் கழகமும் இணைந்து நடத்தும் மருத்துவப்பரிசோதனை நாளைமறுதினம் **17-12-2000** ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு சாவகச்சேரி மகாத்மாகாந்தி சனசமூகநிலையத்தில் இடம் பெறும். இலவச கண் பரிசோதனை, நீரிழிவுப் பரிசோதனை, இரத்த அழுத்தம் மற்றும் பொது மருத்துவப் பரிசோதனையுடன் கண்ணாடிகள் சீருடைகளும் வழங்கப்பட இருக்கின்றன. அனைத்து யாழ்.,தீவக லயன் உறுப்பினர்களும் கலந்து சிறப்பிக்கவும்.

(C14307) செயலர், தலைவர்
யாழ். லயன்ஸ் கழகம்.

## சதா பொன்ஸ்
## புதிய வகுப்புகள்

மாலை நேரம் பாடசாலைகளுக்குச் செல்லும் அநேகமான தென்மராட்சி மாணவர்களின் வேண்டுகோளுக்கு அமைய எமது நிறுவனத்தில் இன்று (15.12.2000) வெள்ளிக்கிழமை மாலை 3.30 மணிக்கு தென்மராட்சி, வடமராட்சி பிரபல ஆசிரியர்கள் இணைந்த சேவையில் 2001ஆம் ஆண்டுக்கான 9,10,11 ஆம் ஆண்டு மாணவர்களுக்கான புதிய வகுப்புகள் ஆரம்பமாகின்றன.

வழமையான வகுப்புகளும் தரம் 5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சைக்கான வகுப்புகளும் நடைபெற்று வருகின்றன.

**சதா பொன்ஸ்**
அல்வாய். (C14310)

## விஷேட அன்னதானம்

அமரர் **பொன்னையா ஆறுமுகம்** நினைவாக நாளை (16-12-2000) சனிக்கிழமை நல்லூரில் அமைந்துள்ள அறுபத்து மூன்று நாயன்மார் குருபூசை ஆச்சிரமத்தில் விசேட அன்னதானம் இடம்பெற இருப்பதால் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

(81694) – குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி

(24ஆவது நாள்)

இணுவில் கந்தசுவாமி கோயில் ஓதுவாராகவும், பஜனைக்குழுத் தலைவராகவும் பணிபுரிந்த

**அமரர் பெரியதம்பி கந்தையா**

அவர்கள் 22.11.2000ல் இறைபதம் அடைந்தமையையிட்டு எமது இதய அஞ்சலியைச் செலுத்துகிறோம்.

- பஜனைக் குழுவினர்

*கந்தசுவாமி கோயில்,*
*இணுவில்.* (81693)

## கண்ணீர் அஞ்சலி

யாழ்.பல்கலைக்கழக
பளுதூக்கும் அணி முன்னாள் தலைவரும்,
மருத்துவபீட இறுதிவருட மாணவனுமாகிய
**செல்வன் இ.றோகான்குமார் அவர்களின்**
அன்புத் தந்தை
**சு.இரட்ணராஜா**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(C 14302) பளுதூக்கும் அணி
யாழ்.பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.

## புலமைப்பரிசில் 2001

18 ஆவது பரீட்சையில்
அதிகூடிய
புள்ளி பெற்றோர்

| | |
|---|---|
| உ. நிவேதிகா | 172 |
| க. கோகுலன் | 168 |
| (மகாஜனக் கல்லூரி) | |
| கு. லஜிந்தன் | 166 |
| (யா. இ. ஆ. பா.) | |
| ஈ. கஜேந்திரா | 164 |
| (பரி. யோவான் கல்லூரி) | |
| வெ. ஜெயப்பிரசாந் | 162 |
| (யா. இ. ஆ. பா.) | |
| இ. கதுஷா | 162 |

**(தரம் 3,4,5,6 புதிய பிரிவுகள் இன்று ஆரம்பம்)**

**BOND - யாழ்நகர்** (81708)

சிறுவர்க்கான கணனி
கணனியூடான கற்பித்தல்
முறைமைகள்
காலம்: **16.12.2000 3.30 p.m.**
**17.12.2000 3.30p.m.**
இடம் : 324, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.
கட்டணம்: இலவசம்
**(C/14306)**

**கலண்டர், டயறிகள் அச்சிடுதல்**

உங்கள் வியாபார நிறுவனப் பெயர்களை கலண்டர், டயறிகளில் குறைந்த கட்டணத்தில் அழகாக அச்சிட்டுப் பெற்றுக் கொள்ளலாம். புத்தகங்கள், சஞ்சிகைகள் என்பன கட்டிக் (Binding) கொடுக்கப்படும்.

**தேவி அச்சகம்**
நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (C/14305)

## மணமகள் தேவை

**சைவ சமயத்தைச் சேர்ந்த, 1961-12-07 இல் பிறந்த, அஸ்வசம்- 53 கிரக பாவம் கொண்ட, 5அடி 10 அங்குல உயரமுடைய, இங்கிலாந்தில் - நிரந்தர வாழிட உரிமை பெற்ற மணமகனுக்கு படித்த, அழகிய, இங்கிலாந்தில் வாழ விருப்புடைய மணமகள் தேவை. புகைப்படத்துடன் விண்ணப்பிக்குக. பொருத்தமற்றவர்களின் படங்கள் உடனடியாக அனுப்பப்படும். விளம்பர இல. 1160. மே/பா - உதயன்.** (81705)

## ராஜா யாழ்ப்பாணம்

**அஜித் (இரு வேடம்)**
**சிம்ரன், ஜோதிகா,**
**விவேக்**
மற்றும் பலரின் நடிப்பில்

**வாலி**

காட்சிகள்:10.30, 2.00 (பு.நே.) (C/14287)

## நாகம்ஸ் சுன்னாகம்

**விஜய், ஜோதிகா நடித்த**
*S.J.*சூர்யாவின்

**குஷி**

*தினசரி* - 11.00, 2.30 (பு.நே.) (81710)

18ஆம் திகதி முதல்
**சுதந்திரம்**

## கிறிஸ்த சேவா ஆசிரமம்

மருதனார்மடம், சுன்னாகம்.

**"கிறிஸ்மஸ் பஜனை"**

நாளை (16-12-2000) சனிக்கிழமை பி.ப 3.00 மணிக்கு **(S.L.T)** ஆசிரம ஆலயத்தில் நடைபெறமாட்டாது. இது பின்னர் 26-12-2000 செவ்வாய் அன்று பி.ப.3.00 மணிக்கு நடைபெறும்.

(81712) - பிலிப் அண்ணன்.

## கண்ணீர் அஞ்சலி

**யா/புனித சாள்ஸ் மகா வித்தியாலய ஆசிரியை**
திருமதி நொயலின் யூக்கலிஸ்ரா தர்மரட்ணம்
அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி எலிசபெத் சூசைதாஸன்**

அவர்கள் புதுக்குடியிருப்பில் 9.12.2000 அன்று இறைபதம் அடைந்த செய்தி கேட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*யா/புனித சாள்ஸ் ம.வி.,* அதிபர், ஆசிரியர்கள்
*யாழ்ப்பாணம்.* (81689) ஆசிரியர் கழகம்.

## மரண அறிவித்தல்கள்

### செல்வி நிஷாந்தி வரதராஜன்

(முன்னாள் மாணவி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி)

செல்வி நிஷாந்தி வரதராஜன் 13.12.2000 அன்று கனடாவில் அகால மரணமானார்.

அன்னார் வரதராஜன் - றஞ்சினி தம்பதிகளின் அன்பு மகளும் நிருபா, கோகுலன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், கடைச்சாமி ஒழுங்கையைச் சேர்ந்த சரவணமுத்து - தனலட்சுமி மற்றும் மல்லாகத்தைச் சேர்ந்த துரையப்பா - தவமணி ஆகியோரின் அருமைப் பேர்த்தியும், தாவடியைச் சேர்ந்த இந்திரதாஸ் - பத்மினி ஆகியோரின் பெறாமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(16.12.2000) சனிக்கிழமை கனடாவில் நடைபெறும்.

***கனடா முகவரி:-***
***R.Varatharajan.***
***87, Silver Spring BIVD,***
***Suite 104, Scarborough,***
***Canada. T.P:- 2916345*** (81690)

தகவல்:
துரையப்பா தவமணி
(அம்மம்மா)
*'இந்திர வாசம்'*
*தாவடிதெற்கு. கொக்குவில்.*

### திருமதி வல்லிபுரம் இராசம்மா

மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் இடம்பெயர்ந்து தற்காலிகமாக நுணுவில் பிள்ளையார் கோயில் வீதி, கரவெட்டி கிழக்கு, கரவெட்டியில் வசித்துவந்த திருமதி வல்லிபுரம் இராசம்மா நேற்று (14.12.2000) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் வல்லிபுரத்தின் அன்பு மனைவியும் கனகசிங்கம் (ஓய்வு பெற்ற லிகிதர்), கமலாதேவி, கந்தசாமி, குணசிங்கம(ஓய்வுபெற்ற நில அளவை உத்தியோகத்தர்), இரத்தினசிங்கம், துரைசிங்கம் (கனடா), அகிலசாந்தினிதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும், பாரதி, சாந்தநாயகி (ஆசிரியை, அல்லாரை த.க.பாடசாலை), ரதிதேவி, புஸ்பதேவி, சுஜா (கனடா), சிவப்பிரகாசம் (கொடிகாமம் பிரதேச சபை) ஆகியோரின் அன்பு மாமியாரும், அன்பரசி (லண்டன்), ஸ்ரீதரன் (நோர்வே), பவானி (கனடா), ஸ்ரீகுமார் (லண்டன்), இளவெயினி, ஜீவநேசன், ஜீவதாசன், குமுதினி, ஜீவாங்கனி, தனுஷா, துஷ்யந்தி, தினேஷ், திவ்வியா, கலையரசி, கார்த்திகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சோபிகா, சுபிதன், சஜிதன், தர்சன், தனுஷா, நிலா, சேந்தன், சகிந்தன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் மேற்குறிப்பிட்ட தற்காலிக முகவரியில் இன்று (15.12.2000) வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெற்று பூதவுடல் வேருண்டை மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கரவெட்டி கிழக்கு,*
*கரவெட்டி.* (C14308)

தகவல்:
**பிள்ளைகள்.**

### திருமதி இராசா நல்லம்மா

நல்லூரைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி இராசா நல்லம்மா நேற்று (14.12.2000) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை - சிவக்கொழுந்துவின் அன்பு மகளும் பவளம்மாவின் அன்புச் சகோதரியும் யோகராசா(வர்த்தகர்), புஸ்பமலர், யோகமணி ஆகியோரின் அன்புத் தாயாரும் தவமணி, புவனேஸ்வரி ஆகியோரின் பெரியதாயாரும் சிவபாதம்(வர்த்தகர்), சிங்கராஜர்(உள்ளக மின்பகுதி, யாழ்.மாநகரசபை), ஞானாம்பிகை, காலஞ்சென்ற தேவநாயகம், சொக்கலிங்கம் ஆகியோரின் மாமியும் சில்வேனியா, ரூபவேனியா, ரேஜிவேனியா, ஸ்ரீஜனனி(திருக்குடும்ப கன்னியர் மடம், மாணவிகள்), சுரேந்திரன்(இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்), றஜீந்திரன், காந்தரூபன், தாரிசரூபன்(சென்.பற்றிக்ஸ் கல்லூரி மாணவர்கள்), சுகந்தரூபன், மோகனரூபி(சுண்டுக்குளி மாணவி), பிரசாந்தினி, விந்துயா(இந்து மகளிர் மாணவிகள்), நித்தியா(வேம்படி மாணவி), மதன், பிரசன்னா(மத்திய கல்லூரி), றோசான், றோனால்ட், மதிசன், கலைமதி ஆகியோரின் பேர்த்தியும் ஆன்சரிநியா, தர்சிகா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (15.12.2000) வெள்ளிக்கிழமை 2.00 மணிக்கு கொக்குவில் இந்து மயானத்துக்கு தகனக் கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மூத்தவிநாயகர் றோட்,*
*நல்லூர்.* (C/14311)

தகவல்:
ம.சிங்கராஜர்
(யாழ்.மாநகரசபை)
சிவபாதம்
(வர்த்தகர்)

# உதயன்

## மக்களைக் காப்பாற்ற...

சுகாதாரப் பகுதி அதிகாரிகளின் தக்க நேர நடவடிக்கையினால் பல நூற்றுக்கணக்கான மக்கள் நோய்களினால் பாதிக்கப்படாமல் காப்பாற்றப்பட்டுள்ளனர்!

வலிகாமம் வடக்கில் உள்ள இரண்டு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் களஞ்சியங்களில் வைக்கப்பட்டுள்ள பெருந்தொகையான அரிசி, மனித பாவனைக்கு உதவாதது என்று கண்டுபிடிக்கப்பட்டு விநியோகிக்காமல் தடுக்கப்பட்டதனை இங்கு குறிப்பிடுகிறோம்.

புழுக்கள், வண்டுகள் நிறைந்த காலம்போன அந்த அரிசி மக்களுக்கு விநியோகிக்கப்பட்டிருந்தால், சம்பந்தப்பட்ட பிரதேச மக்களின் சுகநலம் எந்தளவுக்குப் பாதிக்கப்பட்டிருக்கும்; அவர்கள் எத்தனை சிரமங்களை அனுபவித்திருப்பர் என்பதனை எழுதித்தான் தெரியவேண்டியதில்லை.

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மக்களுக்குச் சேவை செய்வதற்கென்றே உருவான, மக்கள் அமைப்புகள். வியாபார நலன் ஓரளவு பேணப்பட வேண்டுமாயினும் மக்கள் நலனுக்கே முன்னுரிமை வழங்க வேண்டிய நிறுவனம்.

தனியார் வியாபாரிகள் தாம் நட்டமுறக் கூடாது என்பதற்காகவும், குறைந்த விலையில் கொள்வனவு செய்த பொருள்களை அதிக விலையில் விற்று லாபம் பெற வேண்டும் என்பதற்காகவும் பழுதடைந்த, நாட்போன பொருள்களை மக்களுக்குக் ''கட்டி அடித்துவிடுவது'' வழமை. அது சட்டத்துக்கு முரணானது; நீதிக்கு விரோதமானது.

கூட்டுறவுச் சங்கங்கள் மக்களுக்குப் பொறுப்புச் சொல்ல வேண்டியவை; யாரிடம் இருந்து கொள்வனவு செய்த அல்லது வாங்கிய பொருளாயினும் சரி, அதனைப் பெற்றுக் கொள்ளும் போது. அது மனித பாவனைக்கு உகந்ததா, காலம் கடந்ததா என்று பார்த்துக் கொள்வது அவற்றின் கடமை.

யாழ். செயலக அதிகாரிகளும், மக்களுக்கு விநியோகிக்கவெனத் தாம் வழங்கும் பொருள்களை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கும் போது அவை மக்கள் பாவனைக்கு உகந்த நிலையில் உள்ளனவா என்பதனை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

இப்போது விநியோகத்துக்குத் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரிசி, கொழும்பில் இருந்து கப்பலில் வந்தபோதே, மக்கள் பாவனைக்கு உதவாதது என்று கண்டறிந்திருப்பின், அது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவித்து, அதனை வேறு தேவைகளுக்குப் பயன்படுத்தி இருக்கலாம்.

அரசாங்க அதிகாரிகளேனும், கூட்டுறவுச் சங்க அதிகாரிகளேனும் மக்களுக்கு விநியோகிக்கும் உணவுப் பொருள்கள் குறித்து உரிய கவனம் எடுக்காமல், பொறுப்புணர்வு இன்றிச் செயற்படுவது கண்டனத்துக்குரியது.

அவர்கள் தந்தார்கள் நாங்கள் கொடுத்தோம்; அங்கிருந்து வந்ததை நாம் விநியோகித்தோம்; என்று சாட்டுச் சொல்லி — காரணம் கூறி — நியாயப்படுத்த அல்லது ''குற்றத்திலிருந்து'' தப்பிக்கொள்ள இங்கு இடமில்லை. இந்த விவகாரம் மக்கள் மத்தியில் பல சந்தேகங்களைக் கிளப்புவதையும் தடுக்க இயலாது.

மக்களுக்கு வழங்கப்படும் உணவுப்பொருள்களும் ஏனைய பொருள்களும் பாவனைக்கு உகந்தவையா என்று உரிய கட்டங்களிலும் பொறுப்பு வாய்ந்த மட்டங்களிலும் சோதனை செய்து உத்தரவாதம் செய்யக்கூடிய வழி முறை — தடுப்பு முறை — ஒன்று உடனடியாக வகுக்கப்பட வேண்டும்; மக்களைக் காப்பாற்ற.

# இறைவன்கனிகொடுத்தகதையின் உட்பொருள் இறை தத்துவமே!

இறைவன் என்ற சொல் இறை என்ற பகுதியடியாகப் பிறந்தது. எல்லா உயிர்களிலும் எல்லாப் பொருள்களிலும் இறைவன் நீக்கமற நிறைந்து நிற்கிறான். இனி எல்லாம் அவனிடத்திலே இருக்க அவன் அவற்றுக்கு உறைவிடமாக இருக்கிறான். இது இறைவனுடைய விசுவரூபம்.

எல்லாப் பொருள்களிலும் தங்க வேண்டுமானால் சிறிய — மிகச் சிறிய — பொருளாக இருக்கின்றான். மேருகிரி முதலிய பொருள்கள் யாவும் அவனிடத்திலேயே தங்கும்படி அந்தப் பெருமான் மிகப் பெரிய பொருளாக விளங்குகிறான். இதனை உபநிடதம், 'அணோரணியாந் மஹதோ மஹீயா நாத்மா' என்று கூறுகிறது.

அணுவுக்கு அணுவாகவும் மகத்துக்கு மகத்தாகவும் விளங்குபவன் இறைவன்.

### ஒரு பழக் கதை — பழம் கதை

திருக்கயிலாய மலையில் உமாதேவியாருடன் சிவபெருமான் வீற்றிருக்கிறார். விநாயகப்பெருமானும் முருகப்பெருமானும் தாய் தந்தையரை வணங்கி வழிபடச் சென்றார்கள்.

தினந்தோறும் பழங்காலத்தில் மைந்தர்கள் தாய் தந்தையரை வழிபடுகிற வழக்கம் இருந்தது.

ஆனைமுகனும் ஆறுமுகனும் அம்மையப்பரை வலம் வந்து வணங்கினார்கள். சிவமூர்த்தியின் திருக்கரத்தில் ஒரு தெய்வ மாதுளங் கனி இருந்தது. அதனை இருவரும் கேட்டார்கள்.

அரனார், ''அகில உலகங்களையும் ஒரு நொடிப் பொழுதுக்குள் வலம் வருபவருக்கு இந்தக்கனி தரப்படும்'' என்று அருளிச் செய்தார்.

முருகப்பெருமான் மயிலின் மீது ஏறி அகில உலகங்களையும் ஒரு நொடிப் பொழுதுக்குள் வலம் வந்தார்.

'எல்லாம் சிவத்துக்குள் ஒடுக்கம்' என்று கூரிய சீரிய மதியால் சிந்தித்து ஆனைமுக அண்ணல் அம்மையப்பரை வலமாக வந்து கனி பெற்றார்.

### ஞானக் கதிர்

இந்தப் பழக் கதை ஒரு பெரிய தத்துவத்தை உணர்த்துகிறது.

1. தந்தைக்கு உபதேசித்த தயாபரனுக்குச் சிவத்துக்குள் எல்லாம் ஒடுக்கம் என்பது தெரியாதா? தெரியும்.

2. எல்லா உலகங்களையும் சர்வவல்லமையுடைய விநாயகரால் வலம் வர இயலாதா? இயலும்.

3. சிவபெருமான் இரு மைந்தர்களும் கனி கேட்ட போது உள்ள கனியை உடைத்துப் பகிர்ந்து தரக் கூடாதா?

4 அல்லது ஒரு புதிய கனியை உண்டாக்கித் தரக் கூடாதா? வீதியில் விளையாடுகிறவன்கூட ஏதேதோ பொருள்களைத் தருவிக்கிறானே.

5. ''தம்பிக்கே தந்துவிடுங்கள். எனக்கு வேண்டாம்'' என்று விட்டுக்கொடுக்கிற குணம் விநாயகரிடம் இல்லையா?

6. ''அப்பா! அண்ணாவுக்கே அதைக் கொடுங்கள். நான் பிறகு வாங்கிக் கொள்ளுவேன்.'' என்று ஒதுங்கிப் போகிற தியாக புத்தி வேலனிடம் இல்லையா?

7. ஒரு ?றிய கனி காரணமாக, உலகத்தை வலம் வந்தால் கூலி கட்டுமா?

8. பழம் காரணமாக, திருக்கயிலாய மலையில் முருகனும் விநாயகரும் போட்டியிடலாமா?

9. பழத்தின் மீது ஞானமே வடிவான விநாயகருக்கும் ஞானபண்டிதனுக்கும் அத்தனை ஆசையா? என்ற வினாக்கள் அடுக்கடுக்காக எழுகின்றன.

இத்தனை வினாக்களும் தவிடுபொடியாகுமாறு விடை பகர்கின்றேன்.

இறைவனைப் பற்றி நாம் முன்பு என்ன சிந்தித்தோம்? 'எல்லா இடங்களிலும் எல்லாப் பொருள்களிலும் அவன் தங்கியிருக்கிறான்'. 'அவனிடம் எல்லாம் தங்கியிருக்கின்றன' என்று இரண்டு விதமாக நினைத்தோம் அல்லவா?

உப்பு விளைகிற இடம் கடல். கடலின் உவர் நீரில் பிறந்து, உவர்நீரைப் பருகி, உவர் நீரில் வாழ்கின்ற மீனுக்கு உவர் ஏறுவதில்லை. மீன் உண்பவர்கள் கடல் மீனுக்கும் உப்பிட்டுத்தான் சமைத்து உண்பார்கள். அது போல் இறைவன் எங்கும் உறைகினும் உலக மாயை அவனைப் பற்றாதென உணர்க.

'எங்கும் நிறைந்த பொருள் இறைவன் என்றால், ஏன் அது நமது கண்ணுக்குத் தெரியவில்லை? என்பாரும் உளளனர். விறகிலே நெருப்பு இருக்கிறது. பாலில் நெய் இருக்கிறது. ஆனால் இவை கண்ணுக்குத் தெரிகின்றனவா? இல்லை. விறகிலே தீயும், பாலில் நெய்யும் கண்ணுக்குத் தெரியாமையால் அவை இல்லை என்றால் நமக்கு அறிவு இல்லை என்று உலகம் சிரிக்காதா?

விறகைக் கடைந்தால் தீ வெளிப்படும், பாலைக் கடைந்தா.. நெய் வெளிப்படும். அது போல், தியானம் புரிந்தால் இறைவன் வெளிப்பட்டுக் காட்சி தருவான். சாதனைகள் செய்தால் தேவரும் மூவரும் காணமாட்டாத சிவம் தானே வந்து வெளிப்பட்டுத் தோன்றும்.

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியும். மற்றவர் அறியா மாணிக்க மலையும் ஆகிய இறைவன் சொரூப நிலையில் 'சிவம்' என்றும் உலகை நோக்கிய தடத்த நிலையில் 'பதி' என்றும் பேர் பெறுகிறான்.

இறைவனைப் பற்றியும், உயிர்களின் தன்மை பற்றியும் உயிரின் இயற்கைக் குற்றமாகிய ஆணவத்தைப் பற்றியும் நமது சைவ சித்தாந்த நூல்கள் தாம் தெளிவாகக் கூறுகின்றன ஏனைய நூல்களில் ஆணவத்தின் பேர் தானும் கூறுமாறில்லை.

## திருமுருக. கிருபானந்தவாரியார்

சிவத்துக்குள்ளே எல்லாவற்றையும் பார்த்தார் கணபதி.

எல்லாவற்றுக்குள்ளும்சிவத்தைப் பார்த்தார் முருகர்.

இந்த அரிய பெரிய உண்மையை உணர்த்துகிறது. இந்தப் பழங்கதை.

'இறைவன் எங்கும் நீக்கமற நிறைந்திருக்கிறானே' உலக மாயை அவனைப் பற்றாதோ? என்ற வினா எழும்.

# சமய சந்நிதிகளில்

கொழும்புத்துறை, டிசெ. 15

சரித்திரப் பிரசித்தி பெற்ற பொன்னாலை அருள்மிகு ஸ்ரீ வரதராஜப் பெருமாள் கோயிலில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் முற்பகல் 10.30 மணி தொடக்கம் நண்பகல் 12.30 மணி வரை நாடு நலம் பெறவும் மக்கள் மனநிம்மதியுடன் சந்தோஷமாக வாழவும் சமாதானம் வேண்டியும் பக்தவாத்திய சங்கீத பஜனை, கூட்டுப்பிரார்த்தனை, வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

(ஐ - 30)

★ ★ ★

கொழும்புத்துறை, டிசெ. 15

சித்தன்கேணி பெரியவளவு அருள்மிகு ஸ்ரீ மஹாகணபதிப்பிள்ளையார் ஆலயத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை காலை விநாயகர் பெருங் கதைப்படிப்பு ஆரம்பமாகியது தொடர்ந்து 21 தினங்கள் படிப்பு இடம்பெறும்.

எதிர்வரும் 31 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிள்ளையார் பெரும் கதைப் படிப்புப் பூர்த்தியடையும்.

கொழும்புத்துறை, டிசெ. 15

தாவடி மானிப்பாய் வீதிஸ்ரீ சபரிமலை ஐயப்பன் விரத மகரஜோதிப் பெருவிழாவின் 18ஆம் ஆண்டு யாத்ராபூர்த்தி விசேட பூஜை வழிபாடு நாளை சனிக்கிழமை மாலை நடைபெறும்.

★ ★ ★

கொழும்புத்துறை, மேற்கு விநாயகர் ஆலயத்தில் விநாயகர் விரத பூசை வழிபாடுகள் ஆரம்பமாகியுள்ளன.

தினமும் முற்பகல் 10 மணிக்கு முதல் விசேட பூசை இடமபெற்று வருவதாக ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்தனர்.

(ஐ-17)

★ ★ ★

சுண்டுக்குளி மருதடி அருள்மிகு ஸ்ரீ எழும்பிள்ளையார் கோயில் பிள்ளையார் கதை, பூசை, ஆராதனைகள் ஆலயப் பிரதம குரு சிவஸ்ரீ சி. அருணாசலக் குருக்கள் தலைமையில் நடைபெற்றுவருகின்றன.

காலை 9-30 மணிக்கு ஆரம்பமாகும் பூசையை அடுத்து சைவப்புலவர் செ. கந்தசத்தியதாசன் 'விநாயகர் பெருமை' என்ற தலைப்பில் சமயச் சொற்பொழிவாற்றி வருகிறார்.

(ஐ-30)

## நாளை

**மார்கழி 01**

**சனிக்கிழமை**

திதி: ஷஷ்டி
பின் இரவு 2.27 வரை.
நட்சத்திரம்: மகம்
பின் இரவு 2. 24 வரை.
சுபநேரம்: 3.22 - 4.52
ராகுகாலம்: 9.22 - 10.52
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## பங்கீட்டு அட்டை மீளாய்வு

வலி. வடக்கு, டிசெ. 15

தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பகுதிக்கு உட்பட்ட கிராம அலுவலர் பிரிவுகளில் புதிய பங்கீட்டு அட்டைகள் மீளாய்வு செய்யப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றன.

(ம-86)

## மருந்து எடுத்து வருவது குறித்து பாதுகாப்புஅமைச்சுச்செயலருடன் ஈ.பி.டி.பி. தூதுக்குழுவினர் பேச்சு

யாழ்ப்பாணம், டிசெ 15

யாழ். ஆஸ்பத்திரிக்குத் தேவையான மருந்துவகைகளை எடுத்து வருவதற்கு பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெறுவதில் உள்ள தடங்கல்கள் குறித்து பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சந்திரானந்த டி சில்வாவுடன்ஈ.பி.டி.பி. தூதுக்குழு அண்மையில் கலந்துரையாடியது

பாதுகாப்பு அமைச்சு அலுவலகத்தில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு — கிழக்கு தமிழ் விவகார அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நாடாளுமன்ற உறுப்பினர்களான எஸ். தவராசா, கே வி. குகேந்திரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

யாழ். ஆஸ்பத்திரி உட்பட யாழ்பாணத்தில் உள்ள ஏனைய வைத்தியசாலைகளுக்கு மருந்து வகைகளை எடுதது்ச் செல்வதற்கு பாதுகாப்பு அனுமதி பெறுவதில் உள்ள தடைகளால் அங்கு மருந்து வகைளுக்குத் தட்டுப்பாடு ஏற்படுகின்றது என்றும் —

இந்த நிலையை நீக்கி மருந்து வகைகள் ஒழுங்காக யாழ்ப்பாணத்துக்குக் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் - தூதுக்குழுவினர் செயலாளரிடம் கோரினர்.

இது விடயமாக நடவடிக்கை எடுப்பதாக சந்திரானந்த டி சில்வா உறுதி அளித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

(ம-3)

## அபிவிருத்தி கருத்தரங்கு

வலி. தெற்கு சனசமூக நிலையங்களின் சமாசமும் நட்ஸ் நிறுவனமும் இணைந்து நடாத்தும் சமூக அபிவிருத்தி கருத்தரங்கு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி முதல் இடம் பெறும்.

சமாசத் தலைவர் இ. அரிகரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி. வி. கிருஷ்ணசாமி, வலி. தெற்கு பிரதேச சபை செயலர் சி. க. சிதம்பரநாதன், வலி.தெற்கு சமூக அபிவிருத்தி அலுவலர் திருமதி சி. செல்வநாயகம் யாழ். மாவட்ட நட்ஸ் பிரதிநிதி பொன். குணரத்தினம் ஆகியோர் கலந்து கொள்வர்.

**உதயவாக்கு**

நேர்மையும் உழைப்பும் நெருங்கிய நண்பர்களாயிருக்கட்டும்.

— பிராங்க்லின் —

## சமுகமளிக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ 15

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரி விரிவுரையாளர்கள் அனைவரையும் இன்று காலை 9 மணிக்குக் கல்லூரிக்குச் சமுகமளிக்கும்படி கல்லூரியின் உப-பீடாதிபதி எஸ். ஆர். சத்தியேந்திரா கேட்டுள்ளார்.

[இ-3]

## கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்

எமது சக மாணவன்
ரட்ணராஜா றொசான்குமார்
அவர்களின் அன்புத் தந்தையார்

### ரட்ணராஜா

அவர்களின் மறைவினால் துயருறும் அவரது குடும்பத்தினருடன் நாமும் துயரில் பங்கேற்கிறோம்.

16 ஆம் அணி மருத்துவபீடம்,
யாழ். பல்கலைக்கழகம்.

(81686)

## உளநல சங்கம்
## வருடாந்தப் பொதுக்கூட்டம்

காலம்: **16 - 12 - 2000 சனிக்கிழமை**
**பிற்பகல் 3.00 மணி** (புதிய நேரம்)
இடம்: **மாவட்ட வைத்தியசாலை தெல்லிப்பழை**

தலைவர்: **திரு. ச. கணபதிப்பிள்ளை**

மேற்படி கூட்டத்தில் அங்கத்தவர்கள், ஆர்வலர்கள் அனைவரையும் தவறாது கலந்து சங்கச் செயற்பாடுகள் மேன்மையுற ஒத்துழைப்பு நல்குமாறு வேண்டுகின்றோம்.

செயலாளர்

உளநல சங்கம்
**மாவட்ட வைத்தியசாலை,**
**தெல்லிப்பழை.**

குறிப்பு: அங்கத்தவர்களுக்கு தனிப்பட்ட அழைப்புகள் அனுப்பப்பட்டுள்ளன. அழைப்புக் கிடைக்கப்பெறாத அங்கத்தவர்களும் இவ் அழைப்பையேற்று கலந்து கொள்ளுமாறு தயவுடன் வேண்டிக் கொள்கின்றோம்.

(81639)

## தாச்சிப் போட்டி

வலி. வடக்கு, டிசெ. 16

யாழ். மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனுசரணையுடன் இணுவில் அண்ணா விளையாட்டுக்கழகம் அமரர் வ. நல்லதம்பி ஞாபகார்த்தமாக நடத்தி வரும் தாச்சிச் சுற்றுப் போட்டியில் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறும் ஆட்டங்களில் கலந்து கொள்ளும் அணிகள் விவரம் வருமாறு:-

உடுவில் உதய சூரியன் வி. கழகம் எதிர் மல்வம் இந்து வி. கழகம். (ம-86)

## மீனவர் பிரச்சினை தொடர்பான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், டிசெ. 15

குடாநாட்டு மீனவர்கள் எதிர்நோக்கும் பலதரப்பட்ட பிரச்சினைகள் தொடர்பாக விசேட கலந்துரையாடல் ஒன்று விரைவில் இடம்பெறவுள்ளதாக யாழ். மாவட்ட ஈ. பி. டி. பி. நாடாளுமன்ற உறுப்பினர் வி. கே. குகேந்திரன் தெரிவித்தார்

ஒவ்வொரு மீன்பிடிச்சங்கத்தில் இருந்தும் இரு பிரதிநிதிகள் இந்தக் கலந்துரையாடலுக்கு அழைக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் சொன்னார்.

மீனவர்களின் தொழில் பாதிப்பு, அவர்களின் வாழ்க்கை நிலை, எதிர்காலத்தில் மேற்கொள்ள வேண்டிய திட்டங்கள் உட்படப் பல விடயங்கள் இந்தக் கலந்துரையாடலில் ஆராயப்படவிருக்கின்றன. (ம-3)

## ஓராண்டு நினைவஞ்சலி



### அமரர் கதிரவேலு தம்பிப்பிள்ளை

(ஓய்வுபெற்ற துறைமுகப் பணியாளர்)

மலர்வு 20-12-1927
உதிர்வு 27-12-1999

திதி: 15-12-2000

நீங்கள் பிரிந்து ஓராண்டு ஆனாலும்
உங்கள் நினைவலைகள் எங்கள் நெஞ்சை விட்டு நீங்காது.

உங்கள் ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

28/18, மணல்தறை லேன்,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

(81608)

## வலி. கிழக்கு தென்பகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ - து)
## கிளைக்குழு உறுப்பினர் தெரிவு தொடர்பான
# அறிவித்தல்

வடக்கு—கிழக்கு மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் பதிவாளரும் அவர்களினால் ஆக்கப்பட்டு **1998-05-19**ஆம் திகதிய 1028—6 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான "வடக்கு—கிழக்கு மாகாண எல்லைக்குட்பட்ட பகுதியில் இயங்கி வரும் வரையறுக்கப்பட்ட பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் கிளைக்குழுக்களைத் தெரிவு செய்வதற்கான விதிகள்'' இதற்கு அமையவும், மேற்படி சங்கத்தின் துணைவிதி 23-க்கு அமையவும் இச் சங்கத்தில் சகல கிளைகளுக்குமான கிளைக்குழுத் தெரிவுக்குரிய கிளைப் பொதுச்சபைக் கூட்டங்கள் பின்வரும் கால அட்டவணையின்படி பின்வரும் இடங்களில் நடைபெறும்.

### கிளைப் பொதுச்சபைக் கூட்டங்கள் நடைபெறும் இடங்களின் விவரம்

| தொ. இல. | கிளை இல. | கிளையின் பெயர் | கூட்டம் நடைபெறும் இடங்கள் |
|---|---|---|---|
| 01. | 01 | அச்செழு | அச்செழு சைவப்பிரகாச வித்தியாசாலை, நீர்வேலி மாசுவன் |
| 02. | 02 | அச்செழு வடக்கு | அச்செழு சைவப்பிரகாச வித்தியாசாலை, நீர்வேலி மாசுவன் |
| 03. | 03 | நீர்வேலி வடக்கு | நீர்வேலி கிளை இல. 03 இல் இயங்கும் பாலர் பாடசாலை |
| 04. | 04 | நீர்வேலி மத்தி காளி கோயிலடி | நீர்வேலி ஆர். சி. தமிழ்க் கலவன் பாடசாலை, நீர்வேலி வடக்கு |
| 05. | 05 | நீர்வேலி மத்தி | நீர்வேலி மத்தி சனசமூக நிலையம், நீர்வேலி வடக்கு |
| 06. | 06 | நீர்வேலிச் சந்தி | நீர்வேலி ஆர். சி. தமிழ்க் கலவன் பாடசாலை, நீர்வேலி வடக்கு |
| 07. | 07 | நீர்வேலி இராச வீதி | இராமுப்பிள்ளை மகாவித்தியாலயம், நீர்வேலி கரந்தன் |
| 08. | 08 | நீர்வேலி கரந்தன் | இராமுப்பிள்ளை மகாவித்தியாலயம், நீர்வேலி கரந்தன் |
| 09. | 09 | நீர்வேலி கோயிலடி | ஸ்ரீமுருகன் ஐக்கிய நாணய சங்கம், நீர்வேலி கந்தசாமி கோயிலடி |
| 10. | 10 | நீர்வேலி பூதர்மடம் | ஸ்ரீமுருகன் ஐக்கிய நாணய சங்கம், நீர்வேலி கந்தசாமி கோயிலடி |
| 11. | 11 | நீர்வேலி ஐங்கரன் | இராமுப்பிள்ளை வித்தியாலயம், நீர்வேலி கரந்தன் |
| 12. | 12 | கோப்பாய் சந்தி | கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம், கோப்பாய் வடக்கு |
| 13. | 13 | கோப்பாய் விநாயகர் | கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம், கோப்பாய் வடக்கு |
| 14. | 15 | கோப்பாய் அம்பாள் | கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம், கோப்பாய் வடக்கு |
| 15. | 16 | கோப்பாய் இராச வீதி | கோப்பாய் காளிகோயிலடி சனசமூக நிலையம். கோப்பாய் மத்தி |
| 16. | 14 | கோப்பாய் கண்ணகை | றோமன் கத்தோலிக்க பாடசாலை, கோப்பாய் வேதக் கோயிலடி |
| 17. | 17 | கோப்பாய் மத்தி | நாவலர் மகாவித்தியாலயம், கோப்பாய் மத்தி |
| 18. | 18 | கோப்பாய் மத்தி | நாவலர் மகாவித்தியாலயம், கோப்பாய் மத்தி |
| 19. | 19 | கோப்பாய் மத்தி | வெள்ளெருவைப் பிள்ளையார் கோயிலடி சனசமூக நிலையம், கோ. ம |
| 20. | 20 | கோப்பாய் தெற்கு | கலைவாணி சனசமூக நிலையம், அம்மன் கோயிலடி கோ. தெற்கு |
| 21. | 21 | கோப்பாய் தெற்கு | ஞானபாஸ்கரோதய சனசமூக நிலையம், கோப்பாய் தெற்கு |
| 22. | 22 | கோப்பாய் தெற்கு | வளர்மதி சனசமூக நிலையம், டச்சு வீதி, கோப்பாய் தெற்கு |
| 23. | 23 | உரும்பிராய் சந்தி | உரும்பிராய் சந்தி மாதிரி விற்பனை நிலையம், உரும்பிராய் சந்தி |
| 24. | 24 | உரும்பிராய் தெற்கு | சந்திரோதய வித்தியாலயம், உரும்பிராய் |
| 25. | 25 | உரும்பிராய் கணேசா | உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம், உரும்பிராய் வடக்கு |
| 26. | 26 | உரும்பிராய் கிழக்கு | செல்லப்பா சனசமூக நிலையம், உரும்பிராய் கிழக்கு |
| 27. | 27 | உரும்பிராய் வேதக் கோயிலடி | றோமன் கத்தோலிக்கப் பாடசாலை, வேதக்கோயிலடி, உரு. கிழக்கு |
| 28. | 28 | உரும்பிராய் கரந்தன் | கலைவாணி சனசமூக நிலையம், உரும்பிராய் கரந்தன் |
| 29. | 29 | உரும்பிராய் வடக்கு | உரும்பிராய் இந்துக்கல்லூரி, உரும்பிராய் |
| 30. | 30 | ஊரெழு | ஊரெழு கணேசா வித்தியாசாலை, ஊரெழு |
| 31. | 31 | ஊரெழு மேற்கு | ஊரெழு கணேசா வித்தியாசாலை, ஊரெழு |
| 32. | 32 | ஊரெழு வடக்கு | ஊரெழு கணேசா வித்தியாசாலை, ஊரெழு |
| 33. | 33 | இருபாலைச் சந்தி | கோப்பாய் மகா வித்தியாலயம், இருபாலை, கோண்டாவில் வீதி |
| 34. | 34 | இருபாலை கிழக்கு | கோப்பாய் மகா வித்தியாலயம், இருபாலை, கோண்டாவில் வீதி |

அ. க. த. கிருஷ்ணராசா
தலைவர்.

செ. யோகேஸ்வரநாதன்
பதில் செயலாளர்.

[சி/14288]

பொது சன நூலகம்

# தரம் - 1 சமுர்த்தி உத்தியோகத்தர்கள் கிராம அலுவலர்களாகப் பதவி உயர்வு

தென்பகுதியில் சமுர்த்தி அலுவலர் பதவி தரம் - 1 இல் உள்ளவர்கள் கிராம அலுவலர்களாக மாற்றம் செய்யப்பட்டு வருகின்றனர்.

அதேபோல யாழ். மாவட்டத்தில் உள்ள சமுர்த்தி அலுவலர் தரம் 1 இல் உள்ளவர்களும் படிப்படியாக கிராம அலுவலர்களாக மாற்றம் செய்யப்படவுள்ளனர் என்று யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வி.கே.குகேந்திரன் (ஜெகன்) தெரிவித்தார்.

முதற்கட்டமாக யாழ். மாவட்டத்தில் உள்ள 55 சமுர்த்தி அலுவலர் தரம் 1 இல் உள்ளவர்கள் விரைவில் கிராம அலுவலர்களாக நியமனம் பெறவுள்ளனர்.

இதற்கான நடவடிக்கையினை வடக்கு புனர்வாழ்வு புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகார அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்டுள்ளார் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(ம-185)

# வலி.கிழக்கில் 647 குடும்பங்களுக்கு வீடு சேதத்துக்கான கொடுப்பனவு

வலி.கிழக்கு,டிசெ.15

வலிகாமம் கிழக்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் வசிக்கும் 647 குடும்பங்களுக்கு வீடு சேதமடைந்தோருக்கான 25 ஆயிரம் ரூபா கொடுப்பனவின் முதல் கட்டக் கொடுப்பனவு 10 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது.

இந்தக் கொடுப்பனவைப் பெறவுள்ளோரின் வங்கிக் கணக்குகளுக்குப் பணம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்றும் -

உரியவர்கள் தத்தமது கிராம அலுவலர்களுடன் தொடர்புகொண்டு பெயர்ப்பட்டியலில் தமது பெயரை உறுதிப்படுத்திய பின்னர் வங்கியில் பணத்தினைப் பெற்றுக்கொள்ளலாம் என்று திட்டமிடல் பணிப்பாளர் ஆ.கதிரமலைநாதன் தெரிவித்தார்.

(ம-180)

# இலவச பாடநூல்கள் கப்பல் மூலம் தருவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.15

யாழ். மாவட்ட பாடசாலைகளில் 2001 ஆம் ஆண்டில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு விநியோகிக்கவென 2 லட்சத்து 4 ஆயிரம் இலவச பாட நூல்கள் கொழும்பில் இருந்து கப்பல் மூலம் எடுத்து வரப்பட்டுள்ளன.

960 பொதிகளில் எடுத்து வரப்பட்டுள்ள இந்த நூல்கள் அனைத்தும் தற்போது கப்பலில் இருந்து இறக்கப்பட்டு கந்தர்மடம் சைவப் பிரகாச வித்தியாலயத்தில் களஞ்சியப்படுத்தப்படுகின்றன.

இந்தப் புத்தகங்களை அடுத்த ஆண்டு தொடக்கத்தில் மாணவர்களுக்கு வழங்குவதற்கு இலகுவாக மிக விரைவில் வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு விநியோகிக்கப்படும்.

இலவச பாடநூல் விநியோகத்தில் முன்னைய ஆண்டுகளில் எதிர்நோக்கிய பிரச்சினைகள் இவ்வருடம் ஏற்படாது எனவும் -

வருடத் தொடக்கத்திலேயே மாணவர்களுக்கு நூல்கள் விநியோகிக்கப்பட்டு விடும் எனவும் -

மேலதிக மாகாண கல்வி பணிமனை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(ம-6)

### விவசாயிகளின் கோரிக்கையை வலியுறுத்தி

# நியுயோர்க்கில் இலங்கையர் உண்ணாவிரதப் போராட்டம்!

வாஷிங்ரன்,டிசெ.15

இரு கோரிக்கைகளை முன்வைத்து இலங்கை விவசாயிகளின் பிரதிநிதியான - தேசிய வளங்களைப் பாதுகாக்கும் சங்கத்தின் தலைவர் ரத்ன கமகே நியுயோர்க்கில் உள்ள உலக வங்கியின் தலைமையகம் முன்பாக சாகும் வரையான உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டு வருகின்றார்.

வெளிநாட்டில் இருந்து சிறுரக தேயிலை இறக்குமதி செய்வதைத் தடை செய்யும் இலங்கை உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை அமுல் செய்ய வேண்டும் என்றும்-

நெல் கொள்வனவு விலையை கிலோவுக்கு 13ரூபா 50 சதமாக நிர்ணயம் செய்ய வேண்டும் என்றும்-கோரியே அவர் இந்தப் போராட்டத்தை கடந்த இரு வாரங்களாக மேற்கொண்டு வருகின்றார் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த இரு கோரிக்கைகளும் நிறைவேற இலங்கை அரசாங்கத்துக்கு உலக வங்கி அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று அவர் கோரியுள்ளார்.

இந்தப் போராட்டத்தைக் கைவிட வேண்டும் என்று உலக வங்கி அதிகாரிகள் அவரிடம் கேட்டுள்ளனர். அதனை ஏற்க அவர் மறுத்து விட்டதாக அந்த அமைப்பின் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

இதே சமயம் - அவரது உடல் நிலை மோசமடைந்ததை அடுத்து அவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தகவல் கிடைத்துள்ளது என்று அந்தப் பிரதிநிதி மேலும் தகவல் வெளியிட்டுள்ளார்.

(ம-3)

# பொலீஸ் நிலையத்தில் இளைஞர் தாக்கப்பட்டது குறித்து விசாரணை

யாழ்ப்பாணம்,டிசெ.15

வல்வெட்டித்துறை பொலீஸ் நிலையத்தில் வைக்கப்பட்டிருந்த சமயம் இளைஞன் ஒருவன் தாக்கப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரி என்.ஜீவேஸ்வராவிடம் காங்கேசன்துறை பயங்கரவாத தடுப்புப் பிரிவு பொலீஸ் அதிகாரி இத்தகவலைத் தெரிவித்துள்ளார்.

காங்கேசன்துறைத் தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளைப் பார்வையிடுவதற்காக நேற்று முன்தினம் மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரி அங்கு விஜயம் செய்த சமயமே அவரிடம் இத்தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சபாரத்தினம் இளையராஜா (வயது -18) என்ற இளைஞர் கடந்த நவம்பர் மாதம் 11ஆம் திகதி பொலீஸாரால் கைது செய்யப்பட்டார். 28 ஆம் திகதி வரை பொலீஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த அவர் தாக்கப்பட்ட காயங்களுடன் காங்கேசன்துறைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார் என்றும் -

இந்தச் சம்பவம் தொடர்பாகவே தற்போது உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் -

தெரிவிக்கப்பட்டது.

(ம-5)

# எம்.பிக்களுக்கு சொகுசுக் கார்கள் வாங்கும் திட்டத்தில் மாற்றமில்லை

கொழும்பு,டிசெ.15

நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாவனைக்கென 93 புத்தம் புதிய சொகுசுக் கார்களை இறக்குமதி செய்யும் திட்டம் கைவிடப்படமாட்டாது என்று அதிகார வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நாட்டின் பொருளாதார நிலைமையை கருத்தில் கொண்டு அரச செலவீனங்களை மட்டுப்படுத்தும் தீர்மானம் இந்தக் கார்களை இறக்குமதி செய்வதை கட்டுப்படுத்தாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்கான அங்கீகாரத்தை அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்கா பெற்றுள்ளார்.

அடுத்த ஆண்டு முற்பகுதியில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இந்த சொகுசு வாகனங்கள் வழங்கப்பட உள்ளன.

2800 சீ.சீ.பெற்றோல் வாகனங்கள் அல்லது 3000சீ.சீ. டீசல் வாகனங்களே இறக்குமதி செய்யப்படவுள்ளன.

கடந்த ஒக்ரோபரில் நாடாளுமன்றத் தேர்தல்கள் முடிந்த கையோடு இந்தக் கார்களைக் கொள்வனவு செய்யத் திட்டமிடப்பட்டிருந்தது. யுத்த செலவீனங்கள் அதிகரித்திருந்ததை அடுத்து இத்திட்டம் தாமதிக்கப்பட்டிருந்தது.

(ஐ-20)

## ரூபா 2000 கொடுப்பனவு

யாழ்ப்பாணம்,டிசெ.15

யாழ்.பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட ஜே-61, ஜே-62, ஜே-66, ஜே-67, ஜே-68, ஜே-69, ஜே-70,ஜே-71, ஜே-72, ஜே-73, ஜே-74, ஜே-75, ஜே-76, ஜே-77, ஜே -79, ஜே-80 ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கான 2ஆயிரம் ரூபா கொடுப்பனவு எதிர்வரும் 19ஆம் திகதி காலை 9மணிக்கு றக்கா வீதியில் அமைந்துள்ள தையல் பயிற்சி நிலையத்தில் வைத்து வழங்கப்படும்.

கொடுப்பனவைப் பெறவுள்ளோர் தத்தமது கிராம அலுவலர்களுடன் தொடர்புகொண்டு உரிய அத்தாட்சியை பெற்றுக்கொண்டு தேசிய அடையாள அட்டை,குடும்ப அட்டை என்பவற்றுடன் வருமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

(ம-5-30)

## தரம் 9 மாணவருக்கு!

வடமராட்சி,டிசெ.15

வடமராட்சி வலய பாடசாலைகளின் தரம் 9இல் கற்கும் மாணவர்களை நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு தத்தமது பாடசாலைகளுக்குச் சென்று உரிய படிவங்களில் கையெழுத்திடுமாறு கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

ஏற்கனவே படிவங்களில் கையெழுத்திட்ட மாணவர்களும் புதிய நடைமுறையின் கீழ் தயாரிக்கப்பட்ட படிவங்களில் கையெழுத்திடவேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

(ம.173)

## சமுர்த்தி செயலணி அமைக்கும் கூட்டங்கள்

வலி.கிழக்கு,டிசெ.15

வலி.கிழக்கு பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட ஜே-259 கிராம அலுவலர் பிரிவில் சமுர்த்தி செயலணி அமைக்கும் கூட்டம் நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய சனசமூக நிலைய மண்டபத்தில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் த.பாலச்சந்திரன் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் வலி.கிழக்கு பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.வல்லிபுரம், திட்டமிடல் பணிப்பாளர் ஆ.கதிரமலைநாதன், கணக்காளர் க.குகதாஸ், கிராமசேவையாளர் சு.முத்துக்குமாரசாமி மற்றும் சமுர்த்தி முகாமையாளர்கள் ஆகியோரும் கலந்துகொள்வர்.

புதிய செயலணிக் குழுக்கள் அமைக்கப்படுவதோடு சமுர்த்தித் திட்டம் தொடர்பான விளக்கவுரைகளும் இடம்பெறவுள்ளது. (ம-180)

★ ★ ★

வலி.கிழக்கு,டிசெ.15

வலி.கிழக்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஜே-257 கிராம உத்தியோகத்தர் பிரிவில் சமுர்த்தி செயலணி அமைக்கும் கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நல்லூர் ஞானோதய வித்தியாலயத்தில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் அ.ஜெயசிங்கம் தலைமையில் நடைபெறும். இந்த நிகழ்வில் வலி.கிழக்கு பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.வல்லிபுரம், திட்டமிடல் பணிப்பாளர் ஆ.கதிரமலைநாதன், கணக்காளர் க.குகதாஸ், மற்றும் சமுர்த்தி முகாமையாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டு புதிய செயலணிக் குழுவின் செயற்பாடுகள் தொடர்பாக விளக்கவுள்ளனர்.

(ம-180)



யாழ்.இந்துக் கல்லூரி சாரணர் குழுவின் 84ஆவது ஆண்டு விழா அண்மையில் நடைபெற்றது. ஆண்டு நிறைவு மலரின் முதலாவது பிரதியை இந்துக் கல்லூரி அதிபர் அ.சிறிக்குமரன் வைத்தியகலாநிதி ஆ.திருநாவுக்கரசுவிடம் வழங்குவதைப் படத்தில் காணலாம். (ஐ)




வடமராட்சி லயன்ஸ் கழக அனுசரணையில் நெல்லியடி மெதடிஸ்த மிஷன் பாடசாலையில் அண்மையில் கண், பல், பொது மருத்துவ சிகிச்சை முகாம் இடம்பெற்றது. பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி லயன் டாக்டர் எஸ்.கதிரவேல்பிள்ளை நோயாளி ஒருவரை பரிசோதனை செய்வதைப் படத்தில் காணலாம். அருகில் வடமராட்சி லயன்ஸ் கழக உறுப்பினர் லயன் க.செவ்வந்திநாதரும், லயன்ஸ் கழகத் தலைவர் லயன் என்.சோமசுந்தரமும் காணப்படுகின்றனர்.

*(படம்:நெல்லியடிச் செய்தியாளர்)*

### நல்லூர் பிரதேச செயலர் பிரிவில்

# 5 கிராம அலுவலருக்கு திடீர் இடமாற்றம்

யாழ்ப்பாணம்,டிசெ.15

நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த ஐந்து கிராம அலுவலர்களுக்கு திடீர் இடமாற்ற உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

உள்ளக ரீதியாகச் செய்யப்பட்டுள்ள இந்த இடமாற்ற உத்தரவுக்கான காரணம் குறித்து உரிய கிராம அலுவலர்களுக்கு எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

ஜே-119 கோண்டாவில் வடகிழக்கு கிராம அலுவலர் ப.வசந்தகுமார் ஜே-90 பூம்புகார் கிராம அலுவலர் பிரிவுக்கும் -

ஜே-128 கொக்குவில் மத்தி மேற்கு கிராம அலுவலர் ந.தவனேசன் ஜே-101 நீராவியடிக்கும் -

ஜே-110 திருநெல்வேலி மேற்கு கிராம அலுவலர் க.சிவராசா ஜே-99 வண்ணார்பண்ணை வடமேற்குக்கும் -

ஜே-114 திருநெல்வேலி மத்தி வடக்கு கிராம அலுவலர் கே.நித்தியானந்தராசா ஜே-128 கொக்குவில் மத்தி மேற்குக்கும் -

ஜே-99 வண்ணார்பண்ணை வடமேற்கு கிராம அலுவலர் பி.ஆர் ஜேசுதாசன் ஜே-110 திருநெல்வேலி மேற்குக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

ஜே-114 கிராம அலுவலர் பிரிவுக்கு திருமதி ப.சேய்மானந்தனும் ஜே-119 கிராம அலுவலர் பிரிவுக்கு சி.பன்னீர்செல்வமும் பதில் கடமையாற்றவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட பங்கீட்டு அட்டை மீளாய்வைத் தொடர்ந்தே இந்த இடமாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதாக அறிய வந்தது.

(ம-2)

## ஆய்வுகூட கவனிப்பாளர் நியமனம்

யாழ்.பல்கலைக்கழக ஆய்வுகூட கவனிப்பாளர்கள் பதவிக்கு உள்வாரியாக மூன்று பேர் தெரிவு செய்யப்பட்டு நியமனக் கடிதமும் வழங்கப்பட்டுள்ளது.


எஸ்.சதீசன், எஸ்.கோவிந்தராஜன், எஸ்.கனகசபை ஆகிய மூன்று உறுப்பினர்களுக்குமே பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஐ-6)

# தேவை

யாழ். நகரிலுள்ள பிரபல வர்த்தக ஸ்தாபனம் ஒன்றுக்கு
**காசாளர் தேவை.**
க.பொ.த. (சாதாரணம்) பரீட்சையில் சித்தியடைந்தவர்களும் பிணைப்பணம் கட்டக்கூடியவர்களுமான **ஆண்** விண்ணப்ப தாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.
விண்ணப்ப முடிவு திகதி: 25-12-2000
விளம்பர இல. 1159
மே/பா உதயன்.
(81682)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



**தெல்லிப்பழை, வீமன்காமம்**
**லயன்**
**கணவதிப்பிள்ளை**
**திருநாவுக்கரசு**
(கிராம உத்தியோகத்தர் J / 200)
அவர்கள்
அண்மையில் அகில இலங்கை
சமாதானநீதிவானாகப்
பதவிப்பிரமாணம்
செய்து கொண்டார்.
அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

*36, புறாடி ஒழுங்கை,*
*அரியாலை மேற்கு.*
**பொ.புவனேஸ்வரராசா**
குடும்பம்
(81645)

# மலிவு விற்பனை

## லைடன் புடவை நிலையம்

நத்தார், புதுவருட பண்டிகையை முன்னிட்டு
**01.12.2000 - 31.12.2000 வரை**
வாடிக்கையாளரின் நன்மை கருதி விசேட கழிவுடன்
விற்பனைக்கு வருகிறது
இன்றே முந்திக்கொள்ளுங்கள்!!
**கவுண், புடைவைகள், துணிகள், சேட்டிங், சூட்டிங் மற்றும் பல வகையான துணிவகைகள் வாங்கிக்கொள்ள முந்துங்கள்!!!**

*லைடன் புடைவை நிலையம்*

(பஸ் நிலையம் முன்பாக)
410, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

*குறிப்பு:*
வாடிக்கையாளர் நலன் கருதி 16ஆம், 17ஆம் திகதிகளில் முழுநாளும் திறந்திருக்கும்.
(C/14092)

# 46ஆம் நாள் நினைவலைகள்



மலர்வு
05
-
01
-
1983

உதிர்வு
30
-
10
-
2000

## செல்வன் ரிசிகேசன் செல்வராஜா

(நாரந்தனை வடக்கு)

பதினெட்டு ஆண்டுகள் எங்களின் பாசத்தின்
உறைவிடமாய் விளங்கியே எங்கள்
ரிசிகேசனை நாம் எங்கு காண்போம்?
அந் நினைவுகளோடு உமது ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

**- குடும்பத்தினர்.**

*83/15, அரசடி வீதி,*
*யாழ்ப்பாணம்.*
(81677)

## கட்டாக்காலி நாய்கள் பிடிக்கும் பணி

அரியாலை,டிசெ.15
கட்டாக்காலி நாய்களைப் பிடிக்கும் பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப் பட்டுள்ளதாக மாநகர சுகாதாரப் பகுதி அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

யாழ்.மாநகரப் பகுதியில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்துள்ளதாக முறைப்பாடுகள் கிடைத்ததை அடுத்து நாய்களைப் பிடிக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (ஐ-17)

## கூட்டம்

தென்மராட்சி, டிசெ.15
சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தின் செயற்குழுக் கூட்டம் நாளை சனிக்கிழமை காலை 8.00 மணிக்கு கரவெட்டி அஞ்சல் அலுவலகத்துக்கு அருகில் இயங்கும் மன்ற அலுவலகத்தில் நடைபெறுமென செயலாளர் வ. இராசதுரை தெரிவித்தார். (ஐ-117)



**பல்கலைக்கழக அனுமதிகள் மீளப்பெறுவதற்கான காலத்தை 2001.01.31 வரை நீடித்தல்**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, அதற்குச் செய்யப்பட்ட வேண்டுகோளைப் பரிசீலனை செய்துகொண்ட பின்னர், க.பொ.த (உ/த) பரீட்சை - 1999 அடிப்படையில் பல்கலைக்கழகம் ஒன்றில் பதிவு செய்துள்ள மாணவர்கள் தமது பதிவை இரத்துச் செய்து க.பொ.த(உ/த) பரீட்சை - 2000 அடிப்படையில் பல்கலைக் கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கலாம் எனத் தீர்மானித்துள்ளது. அதன்படி, தமது பதிவுகளை இரத்துச் செய்விக்க விருப்பமுள்ள மாணவர்கள் உரிய பல்கலைக்கழகத்தின் பதிவாளருக்கு எழுதிய வேண்டுகோளை 2001.01.31 ஆம் திகதிக்குப் பிந்தாமல் அனுப்புதல் வேண்டும்.

சிறந்த பெறுபேற்றை எதிர்பார்த்து தமது பதிவை முன்னர் இரத்துச் செய்த மாணவர்கள் விரும்பினால் அதே கற்கை நெறிக்கு 2001.01.31 ஆம் திகதிக்குப் பிந்தாமல் பதிவினை மேற்கொள்ளலாம்.

க.பொ.த (உ/த)பரீட்சை - 2000 பெறுபேறுகளின் அடிப்படையில் பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பங்கள் உரிய காலத்தில் கோரப்படுவதுடன் அவற்றுக்கான முடிவு திகதி 2001.01.31 ஆகும் என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

(C/14301) **- பதிவாளர்.**

# தேவை

தொலைத்தொடர்பில் அனுபவம் உள்ள பெண் பிள்ளை தேவை. யாழ். மாநகர சபை எல்லைக்குள் வசிப்பவர் விரும்பத்தக்கது.
*தொடர்பு:*
**திருவள்ளுவர் தொலைத்தொடர்பு நிலையம்,**
(யாழ்.மாநகர சபை அருகில்)
நல்லூர்.
(81657)

**விண்ணக வாழ்வின்**

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்
02
-
12
-
1947

கல்லறை மஞ்சத்தில்
15
-
12
-
1999

## அமரர் சவரிமுத்து பேரின்பநாதன்

(வீதி அபிவிருத்தி உத்தியோகத்தர்)

"மண்ணகத்தில் நேசித்த என்னை விண்ணகத்திலும் நீங்கள் நினைவுபடுத்துங்கள்"

துன்பத்தில் துவளும்
**மனைவி, மக்கள், சகோதரி, மருமக்கள், உற்றார், உறவினர், நண்பர்கள்.**

தகவல்:
*திருமதி பேரின்பநாதன் புஸ்பராணி,*
*ஜோன் ராசா வீதி,*
*அச்சுவேலி.*
(C/14277)

# முதலாவது ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
06
-
07
-
1948

உதிர்வு
27
-
11
-
1999

## திருமதி கேட் சணம் சரஸ்வதி

திதி: 15.12.2000

பூவுலகில் பிறந்தநாள் முதலாக
கண்ணை இமை காப்பது போல காத்து
கற்பனைகள் பல சுமந்து - அவை
நிஜமாக முன் காலனவன் கொடூரத்தால்
இடைவழியில் எம்மைப் பிரிந்து சென்றதேனம்மா?
உடலில் உயிர் உள்ளவரை உங்கள்
நினைவில் நாம் வாழ்வோம்.
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

*கே.பரிமளா,*
*துன்னாலை தெற்கு,*
*கரவெட்டி.*
உங்கள் பிரிவால்
**குடும்பத்தினர்.**
(C/14258)

உ
சிவமயம்

# தசாக கிருஹயக்ஞ அழைப்பு

அன்புடையீர்!
07-12-2000 வியாழக்கிழமை அன்று இறைபதம் எய்திய
**சிவஸ்ரீ பாலசுப்பிரமணியக் குருக்கள்**
**ரவீந்திரக் குருக்கள் அவர்களின்**
ஆத்ம சாந்திக் கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறும்.
16-12-2000 சனிக்கிழமை காலை 9.00 மணி - தசாகம்
17-12-2000 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி - ஏகோதிஷ்டம் மாசியம்
18-12-2000 திங்கட்கிழமை காலை 10.00 மணி - சபீண்டிகரணம்
19-12-2000 செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணி - கிருஹயக்ஞம்
மேற்படி ஆத்ம சாந்திக் கிரியைகளில் கலந்துகொள்ளும் வண்ணம்
அன்புடன் அழைக்கின்றோம்.

169/4, கடற்கரை வீதி,
நீர்கொழும்பு.
**T.P. 031-38117**
(81676)
**திருமதி பா.நாகேஸ்வரி**
**மக்கள், மருமக்கள்.**

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

# பேச்சு தொடர்பான உறுதிமொழியை ஐரோப்பிய ஒன்றியம் கோருகின்றது

## நிதியுதவி வழங்குவதற்கு முன் அரசுக்கு அழுத்தம்

கொழும்பு,டிசெ.15

பாரிஸில் எதிர்வரும் 18ஆம், 19ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்துக்கு முன்னர் இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும் என்று ஐரோப்பிய ஒன்றியம் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுப்பதாக கொழும்பு பத்திரிகை ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இந்தக் காலப்பகுதிக்குள் பேச்சுக்களை ஆரம்பிக்கக்கூடிய சாத்தியம் இல்லாவிட்டால், பேச்சு நடத்தப்படுவதை உறுதிசெய்யும் அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்கும்படியும் ஐரோப்பிய ஒன்றியம் இலங்கை அரசைக் கேட்டுள்ளது.

இது குறித்து இலங்கை அரசு உறுதிமொழி வழங்காவிட்டால் இலங்கைக்கான உதவிகள் எதிர்பார்த்த அளவு கிடைக்கக் கூடிய வாய்ப்பு இல்லை என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ம-3-20)

# மூக்கினால் பேனா பிடித்து எழுதும் கல்கத்தா இளைஞன்



கல்கத்தா,டிசெ.15

மூக்கில் பேனாவை வைத்து எழுதி சாதனை நிலைநாட்டியுள்ளார் தப்பான் டெய் என்ற 31 வயது இளைஞர்.கல்கத்தாவில் கடந்த 11 ஆம் திகதி அவர் இந்தச் சாதனையை நிலைநாட்டியுள்ளார்.

வரலாற்றுத்துறை மாணவனான இவர் தமது காதில் பேனாவை வைத்து எழுதியும் சாதனை புரிந்துள்ளார். அத்துடன் தமது இரு கைகளிலும் ஒரே சமயத்தில் பேனாக்களை வைத்து வேறுபட்ட மொழிகளில் வேகமாகவும் விரைவாகவும் எழுத இவரால் முடிகிறது.

கின்னஸ் புத்தகத்தில் தனது சாதனை இடம் பெறவேண்டும் என்று இவர் விரும்புகிறார். (ஐ-3)

# பயணிகளிடம் பணம் கறக்கும் தரகர் மீது கடும் நடவடிக்கை

## ஜெகன் எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.15

வெளியிடங்களுக்கு கப்பல் மற்றும் விமானப் பயணத்தை மேற்கொள்ளும் பயணிகளிடம் பணம் கறக்கும் தரகர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படவிருப்பதாக யாழ். மாவட்ட ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் வி.கே.குகேந்திரன் (ஜெகன்) தெரிவித்தார்.

பயணப்பதிவு வேலைகளை மேற்கொள்வதற்காக மணியம்ஸ் கட்டடத்தில் புதிதாகத் திற[illegible]ட்டுள்ள அலுவலகத்[illegible]க்கு நேற்று முன்தினம் [illegible] அவர் நிலைமைகளை அவதானித்தார். பணிகள் இடம்பெறும் சமயம் அங்கு பொலீஸார் பணிபுரிவர் என்றும் - தரகர்களுக்கு எதிராக அவர்கள் நடவடிக்கை எடுப்பர் என்றும் - அவர் சொன்னார்.

யாழ்.பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரியும் நேற்றுமுன்தினம் அங்கு சென்று நிலைமைகளை நேரில் பார்வையிட்டார்.

தினமும் 6 பொலீஸார் அங்கு பணிபுரிவர் என்று அவர் கூறினார். (ம-3)

# வன்னி மீதான தடைகளை தளர்த்த அரசு இணக்கம்?

கொழும்பு,டிசெ.15

வன்னியில் இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசத்திற்கு உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் எடுத்துச் செல்வதற்கு விதிக்கப்பட்டுள்ள தடையை குறிப்பிட்டளவு தளர்த்துவதற்கு அரசு முடிவு செய்துள்ளதாக கொழும்பு செய்தி வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இலங்கை அரசாங்கத்துடன் நிபந்தனையற்ற பேச்சுக்களை ஆரம்பிக்க முன்னர் வன்னிப் பகுதி மீது விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடையை நீக்க வேண்டும் என்று விடுதலைப் புலிகள் வலியுறுத்தி வருகின்றனர்.

இதைத் தொடர்ந்து பொருளாதாரத் தடையைக் குறிப்பிட்டளவு தளர்த்துவதற்கு அரசு முடிவு செய்துள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-3-20)

# அமரர் எஸ்.ரி.சின்னத்துரையின் பெயரை கொழும்பு நகர வீதிக்கு சூட்டக் கோரிக்கை

கொழும்பு,டிசெ.15

தமிழ் - சிங்கள உறவுக்குப் பாலமாகச் செயற்பட்ட அமரர் எஸ்.ரி.சின்னத்துரையின் பெயரை கொழும்பு நகரின் வீதி ஒன்றுக்குச் சூட்டவேண்டும் என்று கொழும்பு நகரபிதாவிடம் பௌத்த தேரர் ஒருவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

பொரளை கனத்தை இந்து மயானத்தில் இந்துக்களுக்கான தகனக்கிரியை மண்டபம் ஒன்று அமைக்கப்பட்டு, அதை மாநகர சபையிடம் கையளிக்கும் வைபவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. அதில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

கப்பித்தாவத்தை பாலசெல்வ விநாயகர் ஆலய தர்மகர்த்தாவாகவும், லீலா குறூப் கம்பனிகளின் தலைவராகவும் பணியாற்றிய அமரர் எஸ்.ரி. சின்னத்துரை தம்பதிகளின் நினைவாக பல லட்சம் ரூபா செலவில் அவரது குடும்பத்தினர் இந்த மண்டபத்தை அமைத்துள்ளனர்.

மேற்படி மண்டபத்தை, கடந்த ஞாயிறு நடந்த விசேட நிகழ்வின் போது கொழும்பு நகரபிதா ஓமர் காமிலிடம் கொழும்பு சைவ முன்னேற்றச் சங்கத் தலைவர் சி.தனபாலா கையளித்தார்.

இந்த வைபவத்தில் அமரர் சின்னத்துரையின் குடும்பத்தினரும், அமைச்சர் ஏ.எச்.எம். பௌசி, அருளொளி நிலையக் காப்பாளர் சிவ குருநாதன் அடிகள், மேல்மாகாண சபை உறுப்பினர் மனோ கணேசன், ராஜமனோகரி புலேந்திரன், பௌத்த தேரர்கள் ஆகியோரும் பங்குபற்றினர்.

கொழும்பு வாழ் இந்துக்களுக்கு அவசர தேவையாக இருந்த இந்த தகனக்கிரியை மண்டபம் அமைக்கப்பட்டமை காலம் கருதிய சிறந்த செயற்பாடு என்றும் -

இந்த மண்டபத்தை சிறப்பாகப் பராமரிக்க வேண்டியது அவசியம் என்றும் - அங்கு உரையாற்றிய பலரும் தெரிவித்தனர். (ஐ-3)

### சாவகச்சேரி நகரில் உள்ள

# தேசிய சேமிப்பு வங்கியின் பெட்டகங்கள் மீட்கப்பட்டன

தென்மராட்சி,டிசெ.15

சாவகச்சேரிப் பகுதியில் கைவிட்டு வந்த தேசிய சேமிப்பு வங்கியின் இரும்புப் பெட்டகங்கள், தளபாடங்கள் மற்றும் ஆவணங்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை வங்கி அதிகாரிகளால் அங்கிருந்து மீட்கப்பட்டன.

இரும்புப் பெட்டகங்கள் உடைக்கப்படாத நிலையில் காணப்பட்டன.

வங்கியின் முகாமையாளர் க. இராசதுரை மற்றும் க.தர்மகுலசிங்கம் ஆகியோர் சாவகச்சேரிக்குச் சென்று இவைகளை மீட்டு வந்துள்ளனர். ஷெல் சிதறல்களால் வங்கியின் உடைமைகள் பல சேதமடைந்து காணப்பட்டதாகவும் சில உத்தியோகத்தர்கள் மட்டுமே அங்கு சென்றதால் மிகவும் கஷ்டப்பட்டே இரும்புப் பெட்டகங்களை வாகனங்களில் ஏற்றி வந்ததாகவும் -

தெரிவிக்கப்பட்டது.

கடந்த செப்ரெம்பர் மாதம் சாவகச்சேரிக்குச் சென்ற வங்கி அதிகாரிகள் முக்கிய ஆவணங் களை மீட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-117)

## ஈச்சமோட்டை ஞானவைரவர் ஆலயம் திறப்பு

அரியாலை,டிசெ.15

ஈச்சமோட்டை கலட்டிப்புலம் ஞான வைரவர் ஆலயம் விசேட பூஜை வழிபாடுகளுடன் கடந்த புதன்கிழமை முதல் மீண்டும் வழிபாட்டுக்காகத் திறக்கப்பட்டுள்ளது.

இந்தப் பகுதியில் இருந்து மக்கள் இடம்பெயர்ந்ததை அடுத்து கடந்த ஏழு மாத காலமாக இந்த ஆலயம் பூஜை வழிபாடுகள் இன்றி பூட்டிய நிலையில் இருந்தது.

தற்போது இந்த ஆலயப் பகுதி துப்பரவு செய்யப்பட்டு பிராயச்சித்த அபிஷேகத்துடன் பூஜை வழிபாடுகள் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன. (ஐ-17)

## செஞ்சிலுவைக் கப்பலில் மருந்து வரும்

யாழ்ப்பாணம்,டிசெ.15

யாழ். ஆஸ்பத்திரிக்குத் தேவையான அத்தியாவசிய மருந்துப் பொருள் மற்றும் தபால் பொதிகளை ஏற்றிக்கொண்டு செஞ்சிலுவை சர்வதேசக் குழுவின் கப்பல் எதிர்வரும் 18 ஆம் திகதி பருத்தித்துறைக்கு வரவிருக்கின்றது. இந்தக் கப்பலில் நோயாளர்கள் எவரும் ஏற்றிவரப்படமாட்டார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-3-139)

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

யாழ்ப்பாணம்,டிசெ.15

நல்லூர் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் எதிர்வரும் 18 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு பிரதேச செயலர் கலாநிதி க.குணராசா தலைமையில் பிரதேச செயலக ஆலோசனை மண்டபத்தில் நடைபெறும்.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளும் அதிகாரிகள் அவர்களது 2000 ஆம் ஆண்டு வேலைத்திட்ட முன்னேற்ற அறிக்கைகளையும் 2001 ஆம் ஆண்டு அபிவிருத்தித்திட்டங்களுக்கான பிரேரணைகளையும் உடன் எடுத்து வருமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (ம-6)

### உயர் தொழில்நுட்ப நிறுவனம்

# பரீட்சை வினாத்தாள்களை விமானம் மூலம் எடுத்துவர முயற்சி

யாழ். உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் எதிர்வரும் 18ஆம் திகதி ஆரம்பமாகும் பரீட்சைகளுக்கான வினாத்தாள்களை கொழும்பில் இருந்து விமானம் மூலம் எடுத்து வர ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதற்குரிய சகல ஏற்பாடுகளையும் உயர் தொழில்நுட்ப நிறுவக பரீட்சை இயக்குநர் ஆர்.ஏ.குமார நாயக்க மேற்கொண்டுள்ளார்.

இதேவேளை -

எதிர்வரும் 23 ஆம் திகதி நடைபெறவுள்ள கணக்காளர் பரீட்சையை முன்னிட்டு அன்றைய தினம் உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் நடைபெறவிருந்த உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா முதலாம், 2ஆம் வருடம், உயர் தேசிய வர்த்தக டிப்ளோமா, 2ஆம், 3ஆம் வருடம் வியாபாரகல்வி, தேசிய டிப்ளோமா முதலாம் வருடம், வியாபார நிதி தேசிய டிப்ளோமா முதலாம் வருடம் ஆகிய பரீட்சைகள் எதிர்வரும் 30 ஆம் திகதிக்குப் பிற்போடப்பட்டுள்ளன.

ஏனைய பரீட்சைகள் அனைத்தும் திட்டமிட்டபடி நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (ம-6)

## சனசமூக நிலையம் மீண்டும் திறப்பு

கடந்த ஒரு வருட காலமாக செயற்படாமல் இருந்த நாவாந்துறை சென்.நீக்கிலஸ் சனசமூக நிலையம் மீண்டும் திறக்கப்பட்டுள்ளது.

கடந்த 10 ஆம் திகதி மேற்படி சனசமூக நிலைய மண்டபத்தில் யாழ். மாநகர சனசமூக நிலைய மேற்பார்வையாளர் சோமசுந்தரம் தலைமையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் புதிய நிர்வாக தெரிவு இடம்பெற்றது. தலைவராக சூ.தோமஸ், செயலாளராக அ.தயான், பொருளாளராக இ.அருள்நாயகம் ஆகியோர் நடப்பு நிர்வாகிகளாக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர். (ஐ-17)






**செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவனம்**

(கிறிஸ்தவக் கழகம் நடத்தும்)

**வருடாந்த நத்தார் விழா**

**நாளை 16.12.2000 சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு**

**கில்னர் மண்டபத்தில் நடைபெறும்.**

**பரிசில் வழங்கலும் இடம்பெறும்.**

**இவ்விழாவுக்குத் தங்களை அன்புடன் அழைக்கின்றோம்**

செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவனம் நடத்தும் வருடாந்த நத்தார் விழாவுக்காக நிதியுதவி வேண்டித் தங்களிடம் வந்தபோது இல்லையென்று கூறாது பணஉதவி செய்த அனைத்து அன்புள்ளங்களுக்கும் எமது மனம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*426, காங்கேசன்துறைச் சாலை, யாழ்ப்பாணம்.*

ம.மோகனராஜ்
செயலாளர்

விளம்பர அன்பளிப்பு:-

**K.P.F**

**கங்கா போட்டோ அன் பென்சி**

(கறுப்பு வெள்ளை, கலர் படப்பிடிப்பாளர்கள்)

*கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.* (81662) *கங்கா பென்சி, பலாலி வீதி, கோண்டாவில் சந்தி.*



**G.A.Q., 1st in Com.**

**யாழ்., பேராதனை**

(வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள்)

- மேற்குறிப்பிட்ட பட்டபாடநெறிக்கான பல்கலைக்கழகப் பதிவுகளை எமது நிறுவனத்தில் செய்து கொள்ளலாம்.
- இதற்குரிய விரிவுரைகள் ஆரம்பமாகியுள்ளன.
- விண்ணப்பித்தல், பாடநேர அட்டவணைகள் தொடர்பான சகல விவரங்களையும் நேரில் பெற்றுக் கொள்ளவும்.

விவரங்களுக்கு:- **S.அருள்நங்கை**

**புதிய உயர் கல்லூரி,**

ஆரியகுளம் சந்தி, யாழ்.

(81683)

## சின்னஞ்சிறு விளம்பரம்

### வீடு தேவை

நால்வர் கொண்ட ஓர் ஆசிரியரின் குடும்பத்திற்கு வாடகைக்கு ஒரு வீடு தேவை. நல்லூர், கொக்குவில், ஆனைக்கோட்டை, நவாலி ஆகிய இடங்கள் விரும்பத்தக்கவை. தயவு செய்து நேரிலோ கடிதம் மூலமோ தொடர்பு கொள்ளவும். S.டேவிட், 324, பலாலி வீதி, யாழ்ப்பாணம். (81647)

### ஆங்கில வகுப்புக்கள்

தனிப்பட்டவர்களுக்கு அல்லது சிறு குழுக்களுக்கு ஆங்கிலம்- தரம் 6 தொடக்கம் தரம் 11 வரை, ஆங்கில இலக்கியம் தரம் 9 தொடக்கம் தரம் 11 வரை, E.S.L - Paper Classes for G.A.Q and B.A.தொடர்பு:112, பிறவுண வீதி, யாழ்ப்பாணம். (81597)

### HOUSE FOR SALE

3 Rooms House at Temple Road, Nallur, with Land Space to Build two More Houses. No Brokers Real Buyers only. Also New Dog Cage for Sale. Contact:- RASA VAMADEVAN, No.180, Point pedro Road, Jaffna. T.P. 021-3239. (81567)

### விற்பனைக்கு

மிகவும் நல்ல நிலையிலுள்ள **M.D.90, RX 100** மோட்டார் சைக்கிள்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல.57, நாவலரடி லேன் (காளி கோயிலடி), திருநெல்வேலி. (81685)

இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட முதல்தரமான **(No.1)** ஓட்டியான சோடனை செற் **(FULL SET)** விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 154, கன்னாதிட்டி றோட், யாழ்ப்பாணம். (81687)

புதிய, பழைய வீடியோ கசற்றுக்கள் 800, நசனல் **T.V. (18")** யமகா ஜெனறேற்றர் **(850 H.P)** என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு பீற்றர், 43,கோயில்வீதி, யாழ்ப்பாணம். (81664)

### தவறிவிட்டது

10-12-2000 அன்று தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோயிலில் பெண்களின் ஆடைகள் அடங்கிய கறுப்பு நிற (பச்சை, நாவல் நிற துணியால் அடையாளம் இடப்பட்ட) பாக் ஒன்று தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து க.தயானந்தன், முத்தட்டுமட லேன், கோண்டாவில் மேற்கு, கோண்டாவில் எனும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். (81684)

09.12.2000 அன்று 'லங்கா முடித்த'கப்பலில் பயணப்பை ஒன்று தவறிவிட்டது. **T.**தவேந்திரராசா **V.V.T.** என்று விலாசம் இடப்பட்டுள்ளது. இதைத் தவறுதலாக மாறி எடுத்தவர்கள் ஒதியாவளவு, பொலிகண்டி, வல்வெட்டித்துறை என்னும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும். (81695)

### இறைச்சிக்கோழிதேவை

இறைச்சிக் கோழிகள் தேவை. நல்ல விலை கொடுக்கப்படும். உடன் தொடர்பு: தனபாலசிங்கம், 19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் **V.D.O** சென்ரர் வளவு), முத்திரைச்சந்தையடி, நல்லூர். (81679)

### அபூர்வ ஜோதிடம்

அதிர்ஷ்டத்தை நோக்கியவாழ்வு, பிரச்சினைகளுக்கு விரைவான தீர்வு, ஞானிகளின் ஏடு மூலம் தீராத மர்ம நோய் பறந்து ஓடிவிடல். தொடர்பு: ஆடியபாத வீதி, சரஸ்வதி மில் லேன், கொக்குவில் கிழக்கு. சனி, ஞாயிறு: 8.30-5.00 (81681)

### DISSERTATION BINDING

பல்கலைக்கழக மாணவர்களின் ஆய்வுக் கட்டுரைகள், பல்கலைக்கழக நடைமுறைகளுக்கு அமையக் கட்டிக் கொடுக்கப்படும். [இரு பிரதிகள் கட்டுவதற்கான கட்டணம் ரூபா 350/-] தொடர்பு: பாரதி, 430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி இல.3081 (C/14241)

### O/L ENGLISH 2001

O/L வகுப்பிற்கான ஆங்கிலம் இன்று 15.12.2000 வெள்ளி காலை ஆரம்பிக்கப்படும். அடிப்படையில் ஆரம்பித்து மாதாந்தம் பரீட்சைகள் நடைபெறும். வாரம் இரு வகுப்புக்கள். K.சோமசுந்தரம், சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (81616)

# பகிரங்க அறிவித்தல்

எனது கட்சிக்காரராகிய
யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, இல.75,
**அமிர்தநாதன் யோண்சன் பீற்றர் (ஆனந்தன்)**
என்பவரின் நெறிப்படுத்தலில் நான் இத்தால் விடுக்கும் பகிரங்க அறிவித்தலாவது,

06-12-2000 ஆம் திகதி "வலம்புரி" நாளிதழில் கொழும்பு 15 அளுத்மாவத்தை இலக்கம் 478/3 என்ற முகவரியில் வசிக்கும் விமலாதேவி ஆனந்தராசா என்பவர் எனது கட்சிக்காரரின் நற்பெயர், கௌரவம், தொழில் முன்னேற்றம் என்பவற்றை மிகவும் பாதிக்கும் விதத்திலும், சட்டபூர்வ கடப்பாட்டுப் பொறுப்பற்ற "பொறுப்புகளை" எனது கட்சிக்காரர் மீது சுமத்தும் வகையிலும் அமைவதால் இப்பகிரங்க அறிவித்தல் விடுக்கப்படுகிறது.

எனது கட்சிக்காரர் 1997. 06. 18 ஆம் திகதி குறித்த விமலாதேவி ஆனந்தராசாவின் சார்பில் கொழும்பு செட்டியார் தெரு இலக்கம் 165 "நியூ லலிதா" ஸ்தாபனத்தைச் சேர்ந்த பேரம்பலம் யோகேஸ்வரன் என்பவருடன் கொழும்பு பிரசித்த நொத்தாரிஸ் திருநாவுக்கரசு அவர்கள் முகதாவில் நிறைவேற்றப்பட்ட "கனவான் உடன்படிக்கையின்" பிரகாரம் அதில் கூறப்பட்ட நிபந்தனைகள், கட்டுப்பாடுகளுக்கு அமைவாக யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, இலக்கம் 170, "நியூலலிதா ஜூவலர்ஸ்"நகைமாளிகையை முகாமையாளராக இருந்து நடத்தும் படியும், மாதாந்த சம்பளம் ரூபா 7,500 எனவும் பெறப்படும் இலாபத்தில் 1/4 பங்கு தரப்படும் எனவும் பொருந்தியதன் பிரகாரம் ரூபா 47,375 (ரூபா நாற்பத்து ஏழாயிரத்து முந்நூற்று எழுபத்தைந்து) பெறுமதியான 9 (ஒன்பது) பவுண் எடையுள்ள சில்லறை நகைகளுடன் பொறுப்பேற்று வியாபாரத்தைத் தொடங்கி அத்திகதி தொடக்கம் மிகவும் சிறப்பாக மிகுந்த இலாபத்துடன் குறித்த பே. யோகேஸ்வரன் அவர்கள் 2000 ஆம் ஆண்டு ஆவணி மாதம் தனது குடும்பத்துடன் கனடா செல்லும்வரை சரிவர அவருடன் கணக்குகளைப் பேணி நடத்தி வந்தார். அவ்வேளை குறித்த விமலாதேவி இந்தியாவில் இருந்தமையால் அவரது மூத்த சகோதரர் பேரம்பலம் பரமேஸ்வரன் என்பவர் சகல பொறுப்புக்களையும் விமலாதேவி சார்பில் தான் மேற்பார்வை செய்வதாக எனது கட்சிக்காரருக்கு அறிவித்தார்.

01. 11. 2000 ஆம் திகதி எதுவித முன்னறிவித்தலுமின்றி திடீரென தொலைபேசியில் எனது கட்சிக்காரர் நடத்தி வந்த 'நியூ லலிதா' நகை மாளிகையை தனது மைத்துனரான 'நியூ விதூசா ஜூவல்லறி'யை நடத்தும் சதாசிவம் சத்தியசீலனிடம் அவ்வேளை இருப்பில் உள்ள சகல நகைகள், பணத்துடன் அத்திகதி வரையான கணக்குப் பதிவுப் புத்தகங்கள், விவரங்களுடன் ஒப்படைக்குமாறு குறித்த பேரம்பலம் பரமேஸ்வரன் கேட்டுக்கொண்டார். இது தொடர்பில் தொலைபேசி அறிவித்தலுக்கு மேலாக அதனை உறுதிப்படுத்தி குறித்த விமலாதேவி ஆனந்தராசாவின் தத்துவகாரரெனத் தன்னை வெளிப்படுத்தி குறித்த பே. பரமேஸ்வரன் கொழும்பு செட்டியார்தெரு 157 ஏ, 'நியூ அர்ச்சனா ஜூவலர்ஸ்' கடிதத் தலைப்பில் கடையை. ஒப்படைக்கும்படி எழுத்துமூலம் கேட்டதற்கு இணங்கவும் 'நியூ லலிதா' யாழ்ப்பாணக்கடை சம்பந்தமாக சகல கொடுக்கல் வாங்கல்களுக்கும் தாங்களே பொறுப்பு எனவும் 'நியூ லலிதா' என்ற பெயருக்காகத் தான் சகலரும் வியாபாரம் செய்தார்கள் எனவும் தெரிவித்ததன் பேரில் 1997. 06. 18ஆம் திகதி உடன்படிக்கைப் பிரகாரமும் குறித்த பரமேஸவரன் நெறிப்படுத்திய பிரகாரமும் 01. 11. 2000 ஆம் திகதியன்று ரூபா 650, 275 (ரூபா ஆறு லட்சத்து ஐம்பதாயிரத்து இருநூற்று எழுபத்தைந்து) பெறுமதியான நகைகளையும் பணத்தையும் அத் திகதிவரையான சரியாகப் பேணப்பட்ட சகல கணக்குப் பதிவுப் புத்தகங்களுடனும் பொருள் பட்டியலுடனும் குறித்த சதாசிவம் சத்தியசீலனிடம் எனது கட்சிக்காரர் பற்றுச்சீட்டுப் பெற்றுக்கொண்டு ஒப்படைத்துவிட்டார்.

எனவே இத்தால் சகலருக்கும் குறிப்பாக 1997. 06. 18இல் இருந்து 2000. 11. 01 ஆம் திகதி யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, இல. 170, 'நியூ லலிதா ஜூ வலர்ஸ்' ஸ்தாபனத்துடன் தொடர்புகொண்ட வாடிக்கையாளர்கள், வர்த்தகர்களுக்கும் அறியத் தருவது யாதெனில் எனது கட்சிக்காரர் முகாமையாளராக மாதாந்த சம்பளத்துக்காகவே கடமையாற்றி வந்தார் என்றும் பொருத்தத்தின் பிரகாரமும் சகல கணக்குகளின் அடிப்படையிலும் ரூபா 738, 348 (ரூபா ஏழுலட்சத்து முப்பத்தெண்ணாயிரத்து முந்நூற்றி நாற்பத்தெட்டு) எனது கட்சிக்காரருக்கு குறித்த நிறுவனத்திலிருந்து வருமதியாகவுள்ளதென்றும் எனவே மேற்குறித்த காலப்பகுதியில் சட்ட கடப்பாட்டின் பிரகாரம் குறித்த விமலாதேவி ஆனந்தராசாவே சகல கொடுக்கல் வாங்கல் இலாபங்களுக்குப் பொறுப்பாக இருந்தாரென்றும் இதனால் குறித்த 'நியூ லலிதா ஜூ வலர்ஸ்' யாழ்ப்பாணம் நிறுவனத்திடமிருந்தே எவருக்காவது வருமதியிருந்தால் அவை அறவிடப்பட வேண்டும் எனவும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் தனது சட்டபூர்வ பொறுப்புக்களிலிருந்து தப்பிக்கொள்வதற்காகவும் எனது கட்சிக்காரர் மீது அபாண்டமான பழி சுமத்துவதற்காகவும் குறித்த பத்திரிகை விளம்பரம் கொடுக்கப்பட்டதென்றும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**2000 ஆம் ஆண்டு 12 ஆம் மாதம் 14 ஆந் திகதி**

**பா.தவபாலன்**
**சட்டத்தரணி பிரசித்த நொத்தாரிஸ்**
**சத்திய ஆணையாளர்**
**இல. 82/5, நல்லூர் குறுக்கு வீதி,**
**நல்லூர்,யாழ்ப்பாணம்.**

அமிர்தநாதன் யோண்சன் பீற்றர் ஆகிய நான் வழங்கிய நெறிப்படுத்தலில் எனது சட்டத்தரணி பா. தவபாலன் அவர்கள் இப் பகிரங்க அறிவித்தலை விடுத்துள்ளார்.

(81699) **அ.யோ.பீற்றர் (ஆனந்தன்)**

## ச.ச.நிலைய பொதுக்கூட்டங்கள்

கொழும்புத்துறை,டிசெ.15

யாழ்.மாவட்டத்தில் உள்ள சகல சனசமூக நிலையங்களும் எதிர்வரும் ஆண்டுக்கான புதிய நிர்வாகத் தெரிவுக்கான பொதுக்கூட்டத்தினை 2001 ஜனவரி 31 ஆம் திகதிக்கு முன்பாக நடத்தவேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

புதிய நிர்வாகசபை உத்தியோகத்தர் தொடர்பான விவரத்தினையும், வருடாந்தப் பொதுக்கூட்ட அறிக்கையையும் எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதல் கிழமைக்கு முன்பாக யாழ்.பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

*கடந்த ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற க.பொ.த உயர்தரப் பரீட்சையில் தோற்றிய தென்னிந்தியத் திருச்சபை வீவைஸ் போல்டிங் ஆண்கள் இல்ல மாணவர்கள் ஆகிய*

| | |
|---|---|
| S.M.I. ஜெயரஞ்சன் | - A, 2B |
| S. சந்திரமோகன் | - A, B, C |
| K.ஜெனப்பிரியன் | - A, B, C |
| K.பிரதாபன் | - 2B, C |
| S.குலேந்திரன் | - B, 2C |
| S. செந்தூரன் | - 3 C |

அனைவரும் சித்தி அடைந்து உள்ளனர். இவர்கள் அனைவரையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**வீவைஸ் போல்டிங் ஆண்கள் இல்ல**
*வட்டுக்கோட்டை.* குடும்பத்தினர் (81691)

## 9ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 22 - 03 - 1941

விண்ணில் 26 - 11 - 1991

அமரர்
**செல்லத்துரை கனகசபாபதி**
(முன்னாள் உதவி அரசாங்க அதிபர், ஒட்டுசுட்டான்)


திதி: 15-12-2000

*"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்*
*வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"*
எமது அன்புத் தெய்வம் சிவபதமடைந்து
ஒன்பது ஆண்டு நிறைவான இன்று
அவரை அன்புடன் நினைவு கூருகின்றோம்.

உமது பிரிவால் துயருறும்
**மனைவி, சகோதரர்கள்,**
**மைத்துனர்கள்.**

*நீர்வேலி மத்தி,*
*நீர்வேலி.*
(81698)

## முதலாவது ஆண்டு நினைவஞ்சலிகள்



பரணியில் 1932 - 10 - 17

தரணியில் 1999 - 12 - 27

அமரர்
**விஸ்வலிங்கம் சிறீபாலகணேசமூர்த்தி**
(பிள்ளையார்)
(ஆற்றுப் பள்ளத்தாக்கு அபிவிருத்திச் சபை உறுப்பினர், இராணுவ சேவையாளர்)

திதி: 15-12-2000

பாரினிலே பலகாலம் பாசமுடன் நாமிருந்தோம்.
சீரினிலே சில குறைதானும் தந்திடாது-எம்
வாழ்வினிலே வளம் சேர்த்து வாழ்ந்திட்டீர்-ஏன்?
தாள் பணிய தயக்கமின்றி தாவிச் சென்றீர் சடுதியாக
ஓராண்டு சென்றென்ன செல்லாது எம் நினைவு
எவ்வாண்டும் பிரார்த்திப்போம் சாந்தி பெற!

உங்கள் நினைவால
**மனைவி, பிள்ளைகள்.**

*"திருமகள்"*
*வட்டுவத்தை*
*அல்வாய் கிழக்கு,*
*அல்வாய்.*
(81697)

இதோ வந்துவிட்டன!

## விற்பனைக்கு

கொம்பியூட்டர் ருடே மாத இதழ் ஒக்ரோபர், செப்ரெம்பர், நவம்பர், டிசெம்பர் இதழ்களுடன் கிறிஸ்மஸ் வாழ்த்து மடல்களும் விற்பனைக்கு வந்துள்ளன. வாடிக்கையாளர் உடன் தொடர்பு கொள்ளவும்.

ராஜா குறோசறீஸ்
மின்சார நிலைய வீதி,
பஸ் நிலையம் முன்பாக,
யாழ்ப்பாணம்
T. P. 021 - 2847 (2847)


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 02 — 05 — 1960

மறைவு 27 — 11 — 1999

## அமரர் திருநாமம் கணேசலிங்கம்

**திதி: அபரபக்க பஞ்சமி 15 - 12 - 2000**

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

பாச உறவுகள்.

மு. திருநாமம்
பாடசாலை வீதி,
சங்கரத்தை.
(81630]

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



## அமரர் சின்னத்துரை நடராசா

தோற்றம் 13 – 08 – 1931

மறைவு 15 – 11 – 2000

அன்புடைய நல்ல தந்தையாய்
கனிவு கொண்ட மாமனாய்
பரிவு கொண்ட பேரனாய்
துணிவு கொண்ட பக்தனாய்
மகவுகளின் ஏற்றத்திற்காய்
உறுதி கொண்டு உழைத்து நின்றாய்
உலகமதில் வாழ்ந்து சென்ற – நும்
உறுதிநிலை மறைந்திடுமோ மண்மீதில்.

15 – 11 – 2000 அன்று எங்கள் தந்தையார் சிவபதம் எய்திய செய்தி கேட்டு நேரில் வந்தும், கடித மூலமும், தொலைபேசி மூலமும் ஆறுதல் கூறியவர்களுக்கும், யாழ். திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாசாலை அதிபர், ஆசிரியர், மாணவர்களுக்கும் மற்றும் பல வழிகளில் உதவிகள் புரிந்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியினைத் தெரிவிப்பதோடு இன்று (15 - 12 - 2000) வெள்ளிக்கிழமை எமதில்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

முகவரி:
நாகபூசணி அம்மன் வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.
(18660)

# வெளிமாவட்டங்களுக்குச் செல்ல பயண அனுமதி பெற்றோர் விவரம்

இம்மாதம் 13 ஆம் திகதி வரை பயண அனுமதி வழங்கப்பட்டோர் விவரம்:

**சங்கானை**

(155264ஏ), (155264பி), (155264சி), (155264டி), (161626ஏ), (161803ஏ),
(161803பி), (161803சி), (164066ஏ), (164066பி), (164066சி), (164066டி), (164066ஈ), (164108ஏ), (164108பி), (164108சி), (164108டி), (165830ஏ), (166726ஏ), (166726பி), (166726சி), (166798ஏ), (169132ஏ), (169132பி), (169132சி), (169132டி), (169132ஈ), (169189ஏ), (169373ஏ), (169373பி), (169968ஏ), (170022ஏ), (170022பி), (170022சி), (170260ஏ), (170260பி), (172750ஏ), (172750பி), (172752ஏ), (172752பி), (172870ஏ), (172909ஏ), (173107ஏ), (173107பி).

**சாவகச்சேரி**

(170100ஏ), (170100பி), (170100சி), (170100டி).

**நல்லூர்**

(157782ஏ), (170227ஏ), (170227பி), (170227சி), (170360ஏ), (172703ஏ), (172940ஏ), (172940பி), (172940சி), (173149ஏ), (173439பி), (173149சி).

**சண்டிலிப்பாய்**

(160608ஏ), (160609ஏ), (160609பி), (161574ஏ), (161574பி), (161574சி), (161574டி), (164012ஏ), (166547ஏ), (166547சி), (166547டி), (166547ஈ), (166547எவ்), (166627ஏ), (166627பி), (169046ஏ), (169046பி), (169070ஏ),
(169093ஏ), (169215ஏ), (169875பி), (169395ஏ), (169414ஏ), (170068ஏ), (170068பி), (170068சி), (170135ஏ), (17014ஏ), (170171ஏ), (170171பி), (170259ஏ), (170400ஏ), (170407ஏ), (170407பி), (172716ஏ), (172716பி), (172716சி), (172800ஏ), (172800பி), (172819ஏ), (172819பி), (172849ஏ), (172854ஏ), (172854பி), (172854சி), (172947ஏ), (172947பி), (172947சி), (172964ஏ), (172964பி), (173144ஏ], (173144பி).

**தெல்லிப்பழை**

(169133ஏ), (169134ஏ), (169134பி), (172777ஏ), (172889ஏ), (172889பி), (172889சி), (172889டி), (172889ஈ), (172889எவ்), (172960ஏ), (172974ஏ), (173004ஏ), (173187ஏ), (173187பி), (173187சி).

**உடுவில்**

(150333ஏ), (150333பி), (169191ஏ), (169191பி), (170383ஏ), (171797ஏ), (171797பி), (172721ஏ), (172721பி), (172763ஏ), (172901ஏ), (172901பி), (172916ஏ), (172944ஏ), (173088ஏ), (173088பி), (173126ஏ), (173147ஏ), (173147பி), (173225ஏ).

(ம–6)

## நிவாரண அனுமதிப் பத்திரங்கள்

தென்மராட்சி, டிசெ. 15

பளைப் பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்து கரவெட்டி. பருத்தித்துறை, சண்டிலிப்பாய் ஆகிய பிரதேசங்களில் தங்கியிருந்து பளை ப.நோ. கூ. சங்கக் கிளைக்கடைகளில் நிவாரணப் பொருள்கள் பெறுபவர்களுக்கான டிசெம்பர் மாத நிவாரண அனுமதிப்பத்திரங்கள் இம் மாதம் 18 ஆம், 19 ஆம் திகதிகளில் பின்வரும் இடங்களில் வழங்கப்படவுள்ளன.

மந்திகை, கோயில் சந்தை ஆகிய கிளைக்கடைகளில் நிவாரணம் பெறுபவர்களுக்கு புலோலியில் உள்ள பளைப் பிரதேச செயலக உப அலுவலகத்திலும் —

வல்வெட்டித்துறை, நெல்லியடி, சித்தன்கேணி, ஆனைக்கோட்டை ஆகிய கிளைகளில் நிவாரணம் பெறுவோருக்கு அந்தந்தக் கிளைக்கடைகளில் வைத்தும் —

நிவாரண அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படுமென பிரதேச செயலர் சு. புத்திசிகாமணி அறிவித்துள்ளார்.

(ம-117)

## சமுர்த்தி உத்தியோகத்தர் கருத்தரங்கு

காரைநகர், டிசெ. 15

ஊர்காவற்றுறை பிரதேச செயலக சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு பனை அபிவிருத்தி தொடர்பான கருத்தரங்கு ஒன்று கடந்த திங்கட்கிழமை பனை அபிவிருத்திச் சபை அலுவலகத்தில் நடைபெற்றது.

பனை அபிவிருத்திச் சபையின் பொதுமுகாமையாளர் கே. கோகுலதாஸ் தலைமையில் நடைபெற்ற இந்தக் கருத்தரங்கில் பனை அபிவிருத்திச் சபை உத்தியோகத்தர்கள் கருத்துரைகளை வழங்கினர்.

ஊர்காவற்றுறைப் பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் சமுர்த்தி வலய முகாமையாளர்கள் ஆகியோர் இந்தக் கருத்தரங்கில் கலந்து கொண்டனர்.

(இ-73)

## தையல் டிப்ளோமா பயிற்சி நெறி

யாழ்ப்பாணம், டிசெ. 15

வடக்கு — கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன், நல்லூர்ப் பிரதேச செயலகப் பிரிவில் அடுத்த ஆண்டு நடத்தப்படவுள்ள ஒருவருட தையல் டிப்ளோமா பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

நல்லூர்ப்பிரதேசசெயலகப் பகுதியில் நிரந்தரமாக வசிக்கும் குறைந்தது 10 ஆம் வகுப்புவரை கல்விகற்ற 18 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் இந்தப் பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பிக்க விரும்புவோர் தமது முழுப்பெயர், முகவரி, வயது, கல்வித் தகைமை போன்ற விவரங்களை பிரதேச செயலர், பிரதேச செயலகம், நல்லூர் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

(ம-5)

# காணவில்லை

## ஐயம்பிள்ளை சிவபாக்கியம்

(ஓய்வு பெற்ற தாதி)

முதலியார் ஒழுங்கை, நல்லூரைச் சேர்ந்த ஐ. சிவபாக்கியம் என்பவரை கடந்த 6 மாதங்களாகக் காணவில்லை. கட்டையான தோற்றமும், நரைத்த சிறிய தலைமுடியையும் கொண்ட இவர் சாதாரண மனநோயாளியும் ஆவார் கடைசியாக ரவிக்கையும், லுங்கியும் அணிந்திருந்தார் இவரைப்பற்றிய தகவல் அறிந்தோர் அல்லது கண்டவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

பி. சபாரத்தினம்,
266, நாவலர் வீதி,
(ஆனைப்பந்தி)
யாழ்ப்பாணம்.

தகவல்:
ஐ. வாமதேவன்
(மகன்)

(18680)

# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



முகிழ்ப்பு 01 — 04 — 1915

அவிழ்ப்பு 07 — 12 — 1998

## அமரர் வைரவநாதர் சரவணமுத்து

**திதி: 15 – 12 – 2000**

அன்பின் திருவுருவாய் ஆதரவின் திருக்கரமாய்
மன்னு புகழ் மாண்பின் உறைவிடமாய்
என்றென்றும் எங்கள் இதயத்தில் நிலை பேறு கொண்ட நெடு வள்ளல்
தங்கள் நினைவுகளை நெஞ்சார எண்ணுகின்றோம்
இணுவைப் பெரும் பதியில் உதித்துக் குல தெய்வம்
அரசோலை விநாயகர் அடிதொழுது
கனடாப் பெரும்பதியில் இறை புகுந்த பெருவள்ளல்
நின் புகழ் வாழி.

– குடும்பத்தினர்

இணுவில் கிழக்கு.
(81700)

# அமெரிக்க ஜனாதிபதியாகிறார் புஷ்; தோல்வியை ஏற்றார் அல்கோர்

வாஷிங்டன், டிசெ 15

அமெரிக்க அதிபர் பதவித் தேர்தல் வாக்குகளை மீண்டும் எண்ண வைக்கும் தனது முயற்சிகளை கைவிடுவதாக அல்கோர் அறிவித்துள்ளார். இதனால் புஷ் அடுத்த அதிபராகப் பதவியேற்பது உறுதியாகிவிட்டது.

நேற்று தொலைக்காட்சியில் நாட்டு மக்களுக்கு உரையாற்றிய ஜனநாயகக்கட்சி வேட்பாளரா அல்கோர் தனது தோல்வியை ஒப்புக்கொண்டார்.

அதிபராகும் புஷ்ஷுக்கு வாழ்த்து தெரிவித்த அல்கோர், அவருக்கு பூரண ஒத்துழைப்பு வழங்குவதாகவும் தெரிவித்தார்.

புளோரிடா மாகாணத்தில் வாக்குகளை ஆள்கள் மூலம் மீண்டும் எண்ண வைக்கும் சட்ட நடவடிக்கைகளை நிறுத்தும்படி தனது தரப்பினரிடம் அல்கோர் கேட்டுக்கொண்டார்.

அமெரிக்க அதிபர் தேர்தலில் புளோரிடா மாகாணத்தில் அளிக்கப்பட்ட வாக்குகள் கணனி மூலம் எண்ணப்பட்டதில் தவறு ஏற்பட்டதாகக் கூறிய அல்கோர் ஆள்கள் மூலம் வாக்குகளை மீண்டும் எண்ண சட்ட நடவடிக்கை மேற்கொண்டார். இதனால் இறுதி முடிவினை அறிவிப்பதில இழுபறி நிலை ஏற்பட்டிருந்தது.

இதற்கிடையில், அமெரிக்க உச்ச நீதிமன்றம், புளோரிடாவில் வாக்குகள் எண்ணப்பட்ட முறையில் தவறுகள் நிகழ்ந்ததாக அல்கோர் தரப்பினர் கூறியதை ஏற்றுக்கொண்டுள்ளது.

ஆனால் அரசியல் சட்ட கால வரம்பு காரணமாக அல்கோருக்கு மாற்று வழியைக் கையாள அவகாசம் கொடுக்க முடியவில்லை என்றும் நீதிமன்றம் ஒப்புக்கொண்டுள்ளது.

அமெரிக்க சட்ட அமைப்புகளின் தீர்ப்புகளுக்குள், தற்போதைய தீர்ப்பு அசாதாரணமானது என்று கருதப்படுகிறது.

வரலாற்றில் மிக மிக நெருக்கடியான அமெரிக்க அதிபர் தேர்தல் போட்டி 37 நாள்களின் பின்னர் முடிவுக்கு வந்துள்ளது குறிப்பிடத்தக்கது. (ஒ-7-10)

## சீனி ஏற்றி வந்த கப்பல் மாயம்; கொள்ளையர் கடத்தினரா?

மலேசியா - இந்தோனேசியா இடையே அமைந்துள்ள மலாக்கா நீரிணையில் காணாமற் போயுள்ள கப்பல் கடற்கொள்ளையரால் கடத்தப்பட்டிருக்கலாம்என்று அஞ்சப்படுகிறது.

கடந்த மாதம் 29 ஆம் திகதி சிங்கப்பூர் அருகேயுள்ள 'படன்' துறைமுகத்தில் இருந்து பல லட்சம் ரூபா மதிப்புள்ள சீனியை ஏற்றி வந்த 'ஜெஸ்ம நிரோந்து' என்ற கப்பலே காணாமற் போயுள்ளது.

கடந்த 6 ஆம் திகதி சுமுத்திரா தீவை அடைய வேண்டிய இந்தக் கப்பல் இதுவரை எந்தக் துறைமுகத்தையும் சென்றடையவில்லை.

இதனால் இந்தக் கப்பல் கடற்கொள்ளையர்களால் கடத்தப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

முன்னர் பயணிகள் கப்பல்களை மட்டுமே கொள்ளையர்கள் தாக்கிப் பணம், நகைகளைப் பறிப்பது வழக்கம்.

தற்போது பல நாடுகளிலும் தீவிரவாத அமைப்புகள் செயற்படுவதால் அவர்களுக்குத் தேவையான சீனி, அரிசி போன்ற உணவுப் பொருள்களை ஏற்றிச் செல்லும் கப்பல்களை கொள்ளையடித்து தீவிரவாத அமைப்புகளுக்கு கடற் கொள்ளையர்கள் விற்றுவருவதாகக் கூறப்படுகிறது.

மலாக்கா நீரிணைப் பகுதியில் ஆள் நடமாட்டமற்ற தீவுகளும், அவற்றின் கரையோரங்களில்கப்பல்களைமறைத்து வைக்கக் கூடிய இயற்கையான மறைவிடங்களும் இருப்பதால் சரித்திர காலம் தொட்டே இப் பிரதேசத்தில் கடற் கொள்ளையர்கள் நடமாடி வருகின்றனர். (ஒ-5-6)

## இந்தியா மற்றும் பிரிட்டன்இடையே இராணுவரீதியிலான ஒத்துழைப்பு

புதுடில்லி, டிசெ. 15

இந்தியாவும் பிரிட்டனும் இராணுவ ரீதியான ஒத்துழைப்புகளை மேம்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக பிரிட்டிஷ் பாதுகாப்புத்துறைச் செயலர் ஜெவ்ரி கூன் தெரிவித்தார்.

உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டு இந்தியா வந்துள்ள அவர், மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ்ஸை சந்தித்த பின்னர் செய்தியாளரிடம் இதனைக் கூறினார்,

இரு நாடுகளுக்கிடையே பாதுகாப்பு ஒத்துழைப்புக்கான நடவடிக்கைகளை விரைவுபடுத்துவதே தனது இந்திய விஜயத்தின் நோக்கம் என்றும் கூன் அப்போது குறிப்பிட்டார்.

அணுகுண்டு பரிசோதனை செய்ததற்காக இந்தியா மீது அமெரிக்கா விதித்துள்ள இராணுவ உபகரணங்கள் மற்றும் உதிரிப்பாக விற்பனைத் தடையை நீக்க பிரிட்டன் முயற்சிக்கும் என்று தெரிவித்த கூன் இந்தியாவுக்கு சர்ச்சைக்குரிய இராணுவ உதிரிப்பாக விநியோகத்தை பிரிட்டன் விரைவில் மேற்கொள்ளும் என்று நம்பிக்கை தெரிவித்தார்,

பிரிட்டனிடமிருந்து 14 கோடி டொலர்கள் பெறுமதியான அதிநவீன 'ஹவாக்' போர் விமானங்களை இந்தியா வாங்குவதற்கான ஒப்பந்தத்தில் ஜோர்ஜ் பெர்னாண்டஸூம், கூனும் கையெழுத்திட்டனர். (ஒ)

## மியான்மரில் தடைகள் நீக்கம்

மியான்மரில் எதிர்க்கட்சித் தலைவர்கள் மீதான தடைகள் மற்றும் கட்டுப்பாடுகளை அகற்ற அந்நாட்டு இராணுவ ஆட்சியாளர்கள் ஒப்புக் கொண்டுள்ளனர்.

இதனை ஐரோப்பிய ஒன்றியம் வரவேற்றுள்ளது

இராணுவ ஆட்சியை அகற்றி மியான்மரில் ஜனநாயக அரசை ஏற்படுத்த முயன்றுவரும் எதிர்கட்சித் தலைவர்கள் மீதான தடைகளை நீக்கி எதிர்வரும் ஜனவரி மாதம் அங்கு செல்ல உள்ள ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகள் அவர்களைச் சந்திக்க அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

### பாகிஸ்தானில் செயற்பட்டு வந்த

# யு. என். எச். சி. ஆர் அலுவலகம் அடித்து நொறுக்கப்பட்டது!

இஸ்லாமாபாத், டிசெ. 15

பாகிஸ்தானில் தஞ்சமடைந்துள்ள ஈரானியர்களும், ஈராக்கியர்களும், அங்குள்ள யு. என். எச். சி. ஆர். அலுவலகத்துள் அத்துமீறி நுழைந்துஅங்கிருந்த பொருள்களை அடித்து நொறுக்கியுள்ளனர்.

ஈரான், ஈராக், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளில் நிலவும்அரசியல் குழப்ப நிலை மற்றும் போர்ச் சூழல் ஆகிய காரணங்களால் அந்த நாடுகளைச்சேர்ந்தவர்கள் பாகிஸ்தானுக்குள் தஞ்சமடைந்துள்ளனர்.

இவர்களில் ஆப்கானிஸ்தானியரை மட்டும் வெளிநாடுகள் அகதி அந்தஸ்துக் கொடுத்து வரவழைத்துத் தங்க அனுமதியளித்து வருகின்றன.

இதற்கான ஏற்பாடுகள் பாகிஸ்தானில் உள்ள யு. என். எச். சி. ஆர் அலுவலகம் ஊடாகவே நடைபெற்று வருகின்றன.

இந்த நிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை யு என். எச். சி. ஆர் அலுவலகம் முன்பு கூடிய நூற்றுக்கணக்கான ஈரானியர்களும், ஈராக்கியர்களும் தமக்கும் வெளிநாடுகளில் அகதி அந்தஸ்துக் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஒரு கட்டத்தில் உணர்ச்சி வசப்பட்ட ஆர்ப்பாட்டக்காரர்கள் யு. என். எச். சி. ஆர். அலுவலகத்தை அடித்து நொறுக்கி, அங்கிருந்த ஊழியர்களைப் பணயக் கைதிகளாகப் பிடித்து வைத்தனர்.

பின்னர் பொலீஸார் தலையிட்டுப் பணயக் கைதிகளாக வைக்கப்பட்டிருந்த ஊழியர்களை மீட்டனர்.

அத்துடன் 90 ஆர்ப்பாட்டக்காரர்களையும் கைது செய்தனர்.

ஆப்கானிஸ்தானில் தற்போது உள்நாட்டு யுத்தம் நடைபெறுவதாலேயே அந்த நாட்டவர்க்கு அகதி அந்தஸ்து வழங்கப்படுவதாகவும்.

அத்தகைய நிலை ஈரான், ஈராக்கில் இல்லை என்றும் யு. என். எச். சி. ஆர். அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது. (ஒ 7-10)

### பிரதமர் வாஜபாய் தலைமையிலான

# கூட்டணியில் வாழப்பாடி நீடிக்க டாக்டர் ராமதாஸ் கடும் எதிர்ப்பு

மதுரை, டிசெ. 15

இந்தியாவில் ஆளும் தேசிய ஜனநாயகக் கூட்டணியில் வாழப்பாடி ராமமூர்த்தி தலைமையிலான தமிழக ராஜிவ் காங்கிரஸ் நீடித்தால் தமது பாட்டாளி மக்கள் கட்சி அந்தக் கூட்டணியிலிருந்துவெளியேறும் என்று டாக்டர் ராமதாஸ் எச்சரித்துள்ளார்.

மதுரையில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இந்த எச்சரிக்கையை விடுத்தார்.

பா. ம. க. வின் நிலையை கூட்டணியின் மாநிலத் தலைவரான தமிழக முதலமைச்சர் கருணாநிதியிடம் நேரடியாகவும், கடிதம் மூலமும் தெரிவித்துள்ளதாக ராமதாஸ் மேலும் கூறினார்.

தேசிய ஜனநாயகக் கூட்டணியில் த. ரா. கா இல்லையென்றும். கூட்டணியின் எந்தக் கூட்டத்துக்கும் வாழப்பாடி ராமமூர்த்தி அழைக்கப்படுவதில்லை என்றும்— பிரதமர் வாஜ்பாய் தன்னிடம் கூறியுள்ளதாக ராமதாஸ் குறிப்பிட்டார்.

கூட்டணியில் த. ரா கா. நீடிப்பதா அல்லது பா. ம. க இருப்பதா என்பதை கருணாநிதியே தீர்மானிக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

விடுதலைப்புலிகளுக்கு எதிராகவும், அவர்களுக்கு ராமதாஸ் ஆதரவு தெரிவிப்பது தவறு என்றும் வாழப்பாடி ராமமூர்த்தி கருத்துகள் வெளியிட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (ஒ-7-10)

### பின்தங்கிய நாடுகளுக்கு

# நிதி உதவிகள் வழங்குவதற்கு பிரிட்டிஷ் அரசு புதிய நிபந்தனை

லண்டன், டிசெ. 15

வறிய நாடுகளுக்கு நிதி உதவிகளை வழங்கப் பிரிட்டிஷ் அரசு புதிய நிபந்தனையை விதித்துள்ளது.

சர்வதேச அபிவிருத்திக்கான பிரிட்டிஷ் அமைச்சர் கிளார் சோர்ட் புதிய நிபந்தனைபற்றி கூறுகையில்;

பிரிட்டிஷ் பொருள்கள் அல்லது சேவைகளை வாங்கும் நாடுகளுக்கு மட்டுமே பிரிட்டன் இனிமேல் நிதி உதவிகளை வழங்கும் என்று தெரிவித்தார்.

1997 ஆம்ஆண்டு 28 சதவீதமாக இருந்த நிதிஉதவிபுதிய நிபந்தனையால் 8 சதவீதமாகக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகவும்

பிரிட்டனின் இந்த நடவடிக்கை பிற முன்னேறிய நாடுகளையும் இத்தகைய நிபந்தனையைப் பின்பற்ற வைக்கும் என்றும் சோர்ட் மேலும் தெரிவித்துள்ளார்

சமீப காலமாகப் பிரிட்டனின் பொருளாதாரம் வீழ்ச்சி கண்டு வருவதால் நிதி உதவிகளைக் குறைக்கவே பிரிட்டன் புதிய நிபந்தனையை அறிமுகப்படுத்தியதாகக் கருதப்படுகிறது.

புதிய நிபந்தனைப்படி கடன் பெறும் நாடு. பிரிட்டனிடமிருந்து பொருள்களையோ, சேவைகளையோ வாங்கினால் பிரிட்டன் கொடுத்த நிதி உதவியில் கணிசமான பங்கு மீண்டும் பிரிட்டனுக்கே சென்றடையும் என்று ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள். (ஒ-7-10

### புலிகளுடன் தொடர்பிருப்பதாக

# ஜெயக்குமார் மீது பழி சுமத்திய கண்ணன் பதவி நீக்கப்பட்டார்

புதுடில்லி, டிசெ. 15

பாண்டிச்சேரி அமைச்சர் தேனி ஜெயக்குமாருக்கு விடுதலைப் புலிகளுடன் தொடர்பிருப்பதாகக் குற்றஞ்சாட்டிய பொதுப்பணித்துறை அமைச்சர் கண்ணன் பதவி நீக்கம் செய்யப்பட்டார்.

ஜெயக்குமாரும் இலங்கைத் தமிழர்கள் சிலரும் இருக்கும் புகைப்படத்தை சமீபத்தில் வெளியிட்ட கண்ணன், படத்தில் ஜெயக்குமாருடன் உள்ளவர்கள் விடுதலைப் புலிகள் என்று கூறியிருந்தார்.

அத்துடன், புலிகளுடன் தொடர்புடைய ஜெயக்குமார் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரி தனது ஆதரவு உறுப்பினர்கள் மூவருடன், புதுவை சட்டசபையில் வெளிநடப்பு போராட்டத்தையும் கண்ணன் நடத்தினார்.

மத்திய உள்துறை அமைச்சின் செயலர் கமால் பாண்டே யூனியன் பிரதேசங்களுக்கான தனிச் செயலர் பி. டி. சிங் ஆகியோர், புதுவை அரசுடன் இது குறித்து ஆலோசனை நடத்தினர்.

இந்த நிலையில் புதுவை முதல்வர் சண்முகம் ஆளுநர் ரஜினிராயிடம் அமைச்சர் கண்ணனை பதவி நீக்குவதற்கான சிபாரிசுக் கடிதத்தைக் கொடுத்துள்ளார்.

த. மா. காவில் இருந்து வெளியேறிய கண்ணன் மற்றும் 3 உறுப்பினர்களது சட்டசபை அங்கத்துவம் கட்சித் தாவல் தடைச் சட்டத்தின் கீழ் பறிக்கப்படலாம் என்று கூறப்படுகிறது.

### தம்மீது விசாரணை நடத்தக் கோரி

# பெரு நாட்டுச் சிறைச்சாலையில் தீவிரவாத கைதிகள் கலவரம்

லிமா, டிசெ. 15

பெருவின் தெற்கு பகுதியில் உள்ள இரு சிறைச் சாலைகளில் ஏற்பட்ட கலவரத்தின் போது 5 பொலீஸ் அதிகாரிகள் பணயக் கைதிகளாகப் பிடிக்கப்பட்டனர்.

தலைநகர் லிமாவில் இருந்து 1030 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள சொகாலாயா சிறைச்சாலையில் இச் சம்பவம் இடம்பெற்றது.

சிறையில் அடைக்கப்பட்டிருந்த "ஷைனிங் பாத்" என்ற தீவிரவாத இயக்கத்தைச் சேர்ந்தவர்களே கலவரத்தில் ஈடுபட்டதாகக் கூறப்படுகிறது.

சிறைக் கதவுகளை உடைத்து வெளியே வந்த கைதிகள் காவலுக்கு நின்ற பொலீஸாரைத் தாக்கினர்.

அவர்களது ஆயுதங்களைக் கைப்பற்றிய கைதிகள் பொலீஸாரின் கைகளைக் கட்டி, சிறைச்சாலை கூரை மீது ஏற்றி அங்கு அவர்களை பணயக் கைதிகளாக வைத்துள்ளனர். (ஒ)

# சுகாதார வைத்திய சேவையில் அரசு காட்டும் பாரபட்சம் நீங்க வேண்டும்

## அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் யாழ். கிளை மகஜர்

வடக்கு - கிழக்கில் குறிப்பாக யாழ். குடாநாட்டில் சுகாதார வைத்திய சேவையில் அரசு காட்டிவரும் பாரபட்சங்களை நீக்கவேண்டும். தான் அறிவித்துள்ள மேலதிக கொடுப் பன வுகள் சலுகைகளை வழங்குவதாயின் வடக்கு - கிழக்கில் பணியாற்றும் சகல வைத்தியர்களுக்கும வழங்க வேண்டும்.

அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் யாழ் கிளை யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அனுப்பியுள்ள மகஜரில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தொடர்ந்து கொண்டிருக்கும போரின் காரணமாக யாழ். மாவட்ட சுகாதார வைத்திய சேவை கடும் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளது. போரின் காரணமாக 1990ஆம் ஆண்டிலிருந்து ஆரம்பித்த வைத்திய அதிகாரிகளினதும் வைத்திய நிபுணர்களினதும் வெளியேற்றம் 96 இன் பின் பெருமளவு அதிகரித்ததால் குடாநாட்டின் வைத்திய ஆளணியில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. யாழ்.மாவட்டத்துக்கான அங்கீகரிக்கப்பட்ட வைத்தியர்களுக்கான ஆளணியினரில் 40 வீதமானவர்களே இன்று சேவையில் உள்ளனர். இதே வேளை பெருமளவு அதிகரித்து வரும் நோயாளர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப அங்கீகரிக்கப்பட்ட ஆளணி நாட்டின் ஏனைய பகுதிகள் போலன்றி இங்கு அதிகரிக்கப்படவில்லை.

யாழ். மாவட்டத்தில் வைத்திய அதிகாரிகளுக்கும், வைத்திய நிபுணர்களுக்குமான வெற்றிடங்கள் அதிகளவில் தொடர்கின்றன. ஆனால் அண்மைக்காலங்களில் சுகாதார அமைசசினால் வெளியிடப்பட்ட தீவு முழுமைக்குமான வெற்றிடங்களுக்கான பட்டியல்களில் யாழ்ப்பாணத்தில் உள்ள வெற்றிடங்கள் அநேகமாக முழுமையாக மறைக்கப்பட்டு புறக்கணிக்கப்பட்டுள்ளன.

இப்படியான புறக்கணிப்பை எடுத்துக்காட்டி உரிய நடவடிக்கை எடுக்குமாறு எமது சங்கம் அனுப்பிய கோரிக்கையின்பின் வெளியிடப்பட்ட வைத்திய அதிகாரிகளுக்கான பட்டியலில் யாழ்ப்பாணம் முழுமைக்குமாக எட்டு வெற்றிடங்கள் மட்டுமே காட்டப்பட்டுள்ளது கவலைக்குரிய செயலாக அமைந்துள்ளது.

ஏற்கனவே கடந்த பத்து வருடங்களாக முன்னேற்றம் ஏதுமின்றித் தொடரும் மருந்துகள் மற்றும் உபகரணங்களுக்கான கடுமையான தட்டுப்பாட்டினால் ஏற்படும் நெருக்கடிகளுடன் தம் கடமையை ஆற்றி வரும் வைத்திய அதிகாரிகளுக்கும், வைத்திய நிபுணர்களுக்கும் அதிகரித்து வரும் ஆளணிப் பற்றாக்குறை பெரும் சுமையையும் விரக்தியையும் ஏற்படுத்துவதாக உள்ளது.

ஆளணிப் பற்றாக்குறையால் நாளாந்தம் அதிகளவு வேலையைச் செய்யவேண்டி உள்ளதுடன் மேலதிக நேரம் வேலையாற்றுவதும் கட்டாயமாக உள்ளது. தமது அவசிய தேவைகளுக்காகத் தமக்கு அனுமதிக்கப்பட்ட விடுப்புகளைக்கூட பயன்படுத்த முடியாதுள்ளதுடன் ஓய்வு நாள்களிலும்கூட தொடர்ந்து பணியாற்ற வேண்டியுள்ளது.

இந்த நிலையில் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் கடமையாற்றும் தென்னிலங்கையைச் சேர்ந்த வைத்திய அதிகாரிகளுக்கு மட்டும் பல மேலதிக கொடுப்பனவுகளையும் சலுகைகளையும் வழங்க அமைச்சரவை முடிவெடுத்து செயலாற்றி வருகிறது.

ஆனால் வடக்கு - கிழக்கில் ஏலவே பல சிரமங்களுக்கு மத்தியில் கடமையாற்றும வடக்கு- கிழக்கைச் சேர்ந்த வைத்திய அதிகாரிகளுக்கும் நிபுணர்களுக்கும் மேற்கூறிய கொடுப்பனவுகளை மறுத்து அரசு தனது மாற்றான் தாய் மனப்பான்மையை வெளிக்காட்டியுள்ளது. இது இங்குள்ள வைத்தியர்கள் மத்தியில் பலத்த ஏமாற்றத்தையும் வேதனையையும் ஏற்படுத்தி உள்ளது.

அரசின் இத்தகைய பாரபட்சமான நடவடிக்கைகள் இங்கு தொடர்ந்து கடமையாற்றும் வைத்தியர்களையும் ஏனையவர்களைப்போல வெளியேற உந்தும் என்பதைச் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.

இந்த நிலையில் யாழ். குடாநாட்டின் சுகாதார வைத்திய சேவையில் உள்ள குறைபாடுகளையும் ஆளணித் தட்டுப்பாட்டையும் நீக்கவும் மேலதிக கொடுப்பனவுகள் பற்றிய எமது கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கும் தாங்களும் ஆவன செய்ய வேண்டும் என வேண்டுகிறோம். - என்றுள்ளது. (இ-3)

# ஊக்குவிப்பு மற்றும் இடர்காலக் கொடுப்பனவு யாழ். மாவட்ட வைத்திய அதிகாரிகளுக்கும்!

யாழ்ப்பாணம்,டிசெ.15

வடக்கு - கிழக்கில் பணிபுரியும் வைத்திய அதிகாரிகளுக்கு வழங்கப்படும் ஊக்குவிப்பு மற்றும் இடர் காலக் கொடுப்பனவுகளை யாழ். மாவட்டத்தில் உள்ள வைத்திய அதிகாரிகளுக்கும் வழங்க முடிவு செய்துள்ளோம். இந்த முடிவு அமைச்சரவையின் அங்கீகாரத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சர் ஜோன செனவிரத்ன மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தூதுக் குழுவுடன் நேற்று நடத்திய பேச்சுக்களின் போதே அவர் இப்படிக் கூறினார்

கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான வீ. ஆனந்தசங்கரி, மாவை சேனாதிராசா, சி. சிவமகாராசா ஆகியோர் அமைச்சரைச் சந்தித்து யாழ். ஆஸ்பத்திரி நிலைமையை எடுத்துக் கூறினார்.

வைத்தியர் பற்றாக்குறை, மருந்துத் தட்டுப்பாடு ஆகியவை தொடர்பாக மகஜர் ஒன்றையும் இவர்கள் கையளித்தனர்.

இந்த விடயங்களைத் தீர்க்க நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் உறுதி கூறினார். (இ-3)

# சுண்டுக்குளிப் பகுதியில் மக்கள் இடம்பெயர்ந்த வீடுகளில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரிப்பு!

## தளபாடங்கள், மின்சார உபகரணங்கள் இரவோடு இரவாக கழற்றப்படுகின்றன

யாழ்ப்பாணம்,டிசெ.15

சுண்டுக்குளிப்பகுதியில் மக்கள இடம்பெயர்ந்த வீடுகளில் இடம்பெற்று வரும் திருட்டுக்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன.

தளபாடங்கள் மற்றும் பாவனைப பொருள்கள் மின்சார உபகரணங்கள் ஆகியவற்றில் இருந்து ஆரம்பிக் கப்பட்ட இத் திருட்டுக்கள் படிப்படியாக வீட்டின் கதவுகள், நிலைகள், ஜன்னல்கள், கூரைத் தகடுகள் என்பன வற்றில் வந்து நிற்கின்றன.

சுண்டுக்குளிப் பகுதியில் கொழும்புத்துறையையும், ஈச்சமோட்டையையும் இணைக்கும் பிள்ச்சர்ஸ் லேனில் கடந்த சில நாள்களாகத் தொடர்ந்து இடம்பெற்றுவரும் திருட்டுக்களுக்கு அந்த வீதியிலுள்ள சுமார் 20 வீடுகள் இலக்காகியுள்ளன.

முதல்நாள் பார்த்துவிட்டு வந்த பொருள்கள் மறுநாள் திருட்டுப்போய் விடுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. மின்சார உபகரணங்கள் திருடப்படுவதும அதிகரித்து வருகிறது. சமீபத்தில் சென்.ஆன்ஸ் லேனில் வீடு ஒன்றில் இருந்து பெறுமதிமிக்க மின்சார உபகரணங்கள் திருடப்பட்டன. பெரும்பாலான திருட்டுக்களுக்கு அப்பகுதியில வசித்து வருவோரும் காரணம் என்று குற்றஞ்சாட்டப்படுகிறது.

இரவோடு இரவாக வீட்டுத் தளபாடங்கள், பொருள்கள் கழற்றப்பட்டு விடிந்ததும் லொறி, லாண்ட்மாஸ்டர், டிராக்டர் போன்ற வாகனங்களில் ஏற்றிச் செல்லப்படுவதாக தெரிவிக் கப்படுகிறது.

பிள்ச்சர்ஸ் வீதியில் வீடு ஒன்றில இறுதியாக இருந்த குளிராதனப் பெட்டியுடன் 4 சோடி கதவுகளும் சில தினங்களுக்கு முன் திருடப்பட்டுள்ளன. இது தொடர்பாக பொலீஸில் முறைப்பாடு செய்தும் எந்தவொரு பலனும் கிட்டவில்லை.

இத்திருட்டுக்கள் தொடர்பாகப் பிடிபட்ட சில திருடர்கள் நீதி மன்றில வைத்து பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதன பிறகும் இத்திருட்டுக்கள் தொடர்கின்றன என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-15)

# அனுமதிக்கப்பட்ட தூரத்துக்குள் மீன் பிடிக்கவும் தடை விதிப்பா?

## வடமராட்சி கிழக்கு மீனவர்கள் விசனம்

யாழ்ப்பாணம்,டிசெ.15

வடமராட்சி வடக்குக் கடலில் 500 மீற்றர் தூரத்திற்கு மீன் பிடிக்க இராணுவத்தினர் அனுமதி அளித்துள்ள போதும் 300 மீற்றருக்கு அப்பால் நாம் சென்றால் கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்கின்றனர்.

அண்மையில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே.வி. குகேந்திரனைச் சந்தித்து உரையாடிய போது வடமராட்சி கடற்றொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதி ஆ.விக்கினராஜா இவ்வாறு தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலின் போது யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் தலைவர் உட்பட பிராந்திய கடற்றொழிலாளர் சமாச பிரதிநிதிகளும், கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதிகளுமாக 45 உறுப்பினர்கள் கலந்து கொண்டு தமது குறைபாடுகளையும் தேவைகளையும் எடுத்துக் கூறினர்.

இந்தக் கலந்துரையாடலின் போது ஆ.விக்கினராஜா மேலும் தெரிவித்ததாவது:-

எமது பகுதியில் காலை 6 மணிக்கு இராணுவத்தினர் பாஸ் தருகின்றார்கள். 10 மணிக்கு கரைக்குத் திரும்பிவிட வேண்டும் அல்லது கடற்படையினரின் அடி உதைகளுக்கு தொழிலாளர்கள் ஆளாகின்றனர்.

கடலில் 4 மணி நேரமே தொழில் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளோம். இந்த நேரத்திற்குள் எமது பகுதி 16 சங்கங்களையும் சேர்ந்த இரண்டாயிரம் தொழிலாளர்களும், தற்போது இடம்பெயர்ந்து வந்துள்ள 8 சங்கங்களின் தொழிலாளர்களும் தொழில் செய்ய வேண்டி இருக்கின்றது.

300 மீற்றர் தூரத்தை மீறிச் செல்வோர் கடற்படையினரின் தாக்குதலுக்கு இலக்காகின்றனர். அவர்கள் மீது கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்கின்றனர். இதனால் தொழிலாளர்கள் சிலர் அண்மையில் காயமடைந்தமை அனைவருக்கும் தெரிந்த விடயம்.

எமக்கு அரசாங்கம் நிவாரணம் எதனையும் தரத் தேவையில்லை. எமது கடலில் நாம் தொழில் செய்யப் பூரண சுதந்திரம் தந்தால் போதும். நாம் அவர்களுக்கு நிவாரணம் கொடுப்போம்.

அதிகாலை 2 மணி தொடக்கம் 9 மணி வரை தொழில் செய்வதற்கு எமக்கு அனுமதி தரவேண்டும். இது தொடர்பாகத் தாங்கள் இராணுவத்துடன் தொடர்பு கொண்டு எமக்கு நல்லதொரு முடிவினை பெற்றுத்தர வேண்டும். - என்று தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலுக்கு சமுகமளித்த சகல மீனவர் சங்கப் பிரதிநிதிகளும் தமது பிரதேசத்தில் இராணுவத்தினரால் விதிக்கப்பட்டுள்ள நேரக் கட்டுப்பாடு மற்றும் தூரம் என்பவற்றைச் சுட்டிக்காட்டி அவற்றை அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தனர்.

இக்கோரிக்கை தொடர்பாக இயன்ற நடவடிக்கை எடுப்பதாகவும்-

இராணுவ அதிகாரிகளுடன் கலந்துரையாட அனுமதி பெற்ற பிறகு மீனவர் பிரதிநிதிகளையும் அழைத்து இராணுவத்தினரின் கெடுபிடிகளை எடுத்துக்கூறி அவற்றை விலக்க நடவடிக்கை எடுப்பதாகவும் -

நாடாளுமன்ற உறுப்பினர் கே.வி. குகேந்திரன் உறுதியளித்தார்.

கொழும்புத்துறைப் பகுதி மீனவர்களின் வலைகள் மற்றும் வள்ளங்களை கடற்படையினர் சேதமாக்கி உள்ளதால் 2 லட்சத்து 70 ஆயிரம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக கொழும்புத்துறை மீனவர் சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

தமது பகுதி மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

எமது பகுதி மீனவர்கள் ஒரு கிலோ மீற்றர் தூரமே தொழில் செய்யக் கடற்படையினர் அனுமதி தந்துள்ளனர். இந்தப் பிரதேசம் ஓர் அடி ஆழமான நீர்ப்பரப்பாகும். இதில் நாம் எப்படித் தொழில் செய்ய முடியும்? அகதிகள் நடந்து வரும் பகுதியில் கடற்றொழிலாளர்களாகிய நாம் என்ன செய்வது?

எமது வயிற்றுப்பாட்டுக்காகவே நாம் இராணுவத்தினர் விதித்துள்ள எல்லையைக் கடந்து ஆழ்கடல் பகுதிக்குள் மீன் பிடிக்கப் போகின்றோம். இதைக் கரையில் நின்று பார்க்கும் கடற்படையினர் உடனடியாக எமது பாஸ்களையும் பறித்துக்கொண்டு வலைகள், வள்ளம் ஆகியவற்றையும் எடுத்துச் சென்று விடுகின்றனர்.

இவ்வாறு பறிமுதல் செய்யப்பட்ட வள்ளம், வலைகளில் ஒரு பகுதி உங்கள் பிரதிநிதிகளால் எமக்குப் பெற்றுத் தரப்பட்டுள்ளது. ஆனால் இன்றுவரை 2 லட்சத்து 70 ஆயிரம் ரூபா பெறுமதியான வலைகள் எமக்குத் தரப்படவில்லை.

இது தொடர்பாக இராணுவத்தினரிடம் கேட்டால் "இந்தக் கடலுக்குள் தான் போட்டோம் எமக்குத் தெரியாது" என்கிறார்கள். எம்மிடம் பறித்த வலைகளை இவர்கள் ஏன் கடலுக்குள் போட வேண்டும்?

இது மட்டுமல்லாது அவர்களால் அனுமதி தரப்பட்டுள்ள பகுதிக்குள் இருக்கும் கம்புகள், பைப்புகளைக் கூட கடற்படையினர் பிடுங்கிச் செல்கின்றனர். இவ்வாறு கொண்டு செல்லும் கம்புகளை தீவுப்பகுதி மீனவர்களுக்கு குறைந்த விலையில் விற்று வருவதாகவும் அறிந்து கொண்டோம். இவ்வாறான செயல்கள் மூலம் மீனவர்களாகிய எமக்கு ஏற்பட்ட நஷ்ட விவரம் அடங்கிய பட்டியலையும் உங்களிடம் கையளிக்கின்றோம். இதற்குரிய நஷ்டஈட்டை நீங்கள் பெற்றுத் தர வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தனர்.

இதற்குப் பதிலளித்த கே.வி.குகேந்திரன் -

மன்னார்ப் பகுதி மீனவ மக்கள் வாக்களித்துத் தெரிந்தெடுக்கப்பட்ட கட்சி வேறாக இருந்தும் எமது அமைச்சர், அவர்களுக்கு உதவும்போது உங்கள் வாக்குகள் மூலம் தெரிவு செய்யப்பட்ட நாம் உங்களுக்கு உதவாமல் இருப்போமா? இது தொடர்பாக உங்களுக்கு உதவும் நோக்குடனேயே இன்று இக்கூட்டம் ஒழுங்குபடுத்தப்பட்டது. இந்தப் பிரச்சினைகளுக்கு மிக விரைவில் நல்ல முடிவு பெற்றுத்தரப்படும் எனத் தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில் மண்டைதீவு, தீவுப்பகுதி மற்றும் பாசையூர், குருநகர் பகுதி மீனவர்களின் அன்றாடப் பிரச்சினைகள் குறித்தும் ஆராயப்பட்டதுடன் அது தொடர்பான ஒரு சில முடிவுகளும் உடனடியாக எடுக்கப்பட்டன.

(ம-5-6-173)

# 159 தபால் பொதிகளே கப்பலில் வருகின்றன

## ஏனையவை திரும்பவும் எடுத்துச் செல்லப்பட்டன

யாழ்ப்பாணம்,டிசெ.15

திருகோணமலையில் இருந்து நேற்று முன்தினம் புறப்பட்ட 'லங்கா முடித்த' கப்பலில் 159 தபால் பொதிகள் மட்டுமே எடுத்து வரப்பட்டதாக தபால் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இரு லொறிகளில் 550 தபால் பொதிகளை கப்பலில் ஏற்றவென திருகோணமலை தபாலகத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்ட போதும் நேற்று முன்தினம் மாலை 6 மணிவரை 159 தபால் பொதிகளே ஏற்றப்பட்டன.

நேரம் போதாமையால் ஏனைய தபால் பொதிகளை மீண்டும் திருகோணமலை தபாலகத்திற்கே எடுத்துச்சென்று களஞ்சியப்படுத்தியுள்ளதாக திருகோணமலை தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை இன்று யாழ். பிரதம தபாலகத்திற்கு எடுத்துவரப்படும் 159 தபால் பொதிகளும் நாளை தரம் பிரிக்கப்பட்டு விநியோகிக்கப்படும் எனவும்-

திருகோணமலையில் தேங்கிக் கிடக்கும் தபால் பொதிகளை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுக் கப்பல் மூலம் எடுத்துவர ஒழுங்குகள் செய்யப்படுவதாகவும் யாழ்பிரதம தபாலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.(இ-6)

## சாரதாதேவி ஜயந்தி விழா

யாழ்ப்பாணம்,டிசெ.15

திருநெல்வேலி இராமகிருஷ்ணாலயம் ஏற்பாடு செய்துள்ள தூய அன்னை ஸ்ரீ சாரதாதேவியின் ஜயந்தி தின விழா நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 5.30 மணி முதல் இராமகிருஷ்ணாலய பிரார்த்தனை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

விசேட பூசைகள், வழிபாடுகள் மற்றும் பஜனை, நுண்கலை மாணவிகளின் நடனம், பாட்டு என்பன விசேட நிகழ்வுகளாக இடம்பெறவுள்ளன. (இ-7)

# பிரபா விடுத்த சமாதான அழைப்புக்கு அரசு சாதாரண அறிக்கை மூலம் பதில்!

## ஐ.தே.க. துணைத் தலைவர் கண்டனம்

விடுதலைப் புலிகளின் தலைவர் வேபிரபாகரன் மாவீரர் தினச் செய்தியில் சமாதானம் தொடர்பாக தமது அமைப்பின் நிலைப்பாட்டை வெளியிட்டிருந்தார். ஆனால் அரசு அதற்கான பதிலை வழங்காது காலம் தாழ்த்திவிட்டு சாதாரண அறிக்கை ஒன்றை மட்டும் வெளியிட்டுள்ளது.

மேற்கண்டவாறு ஐ.தே.கவின் துணைத் தலைவர் காமினி அத்துக் கொறள தெரிவித்தார்.

தலைவர் பிரபாகரனின் சமாதானப் பேச்சுத் தொடர்பான அழைப்புக் குறித்து வெளிவிவகார அமைச்சர் லக்ஷமன் கதிர்காமர் கடந்த செவ்வாய்க்கிழமை செய்தியாளர் மாநாடு நடத்தி அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தார்.

இந்த அறிக்கை தொடர்பாக காமினி அத்துக்கொறள விடுத்துள்ள செய்திக் குறிப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நேர்வே அரசு மூலம் சமாதானப் பேச்சுக்கு வரத் தாம் தயார் என்று விடுதலைப் புலிகளின் தலைவர் வேபிரபாகரன் தனது மாவீரர் தினச் செய்தியில் தெரிவித்திருந்தார். இதற்கு பதில் அளிக்காமல் அரசு காலம் தாழ்த்தி வந்தது. இறுதியில்கடந்த செவ்வாய்க்கிழமை சாதாரண அறிக்கை ஒன்றை அரசு விடுத்தது. அதுவும் அமைச்சர்களுக்கு இதுபற்றி அறிவிக்கக்கூட இல்லை.

வன்னிக்கு உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களை அனுப்புவது குறித்து விவாதம் நடத்துமாறு தமிழர் விடுதலைக் கூட்டணி நாடாளுமன்றில் கோரியிருந்தது. அதற்குப் பதிலளிக்க சபையில் எவரும் இருக்கவில்லை-என்றார். (இ-3)

# மார்பு நோய் சிகிச்சை நிலையத்தை மீண்டும் பண்ணையில் இயங்க வைக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ.15

யாழ்.நகரப் பகுதியில் தற்காலிகமாக இயங்கும் மார்பு நோய் சிகிச்சை நிலையத்தினை பண்ணையிலுள்ள பழைய கட்டடத்தில மீண்டும் இயங்கச் செய்ய வேண்டும்.

இவ்வாறு நேற்று நடைபெற்ற யாழ்.மாநகர சபையின் சுகாதாரக் குழுக் கூட்டத்தில் கோரப்பட்டது.

மாநகரசபையின் சுகாதாரக் குழுத் தலைவர் கே.சின்னத்துரை தலைமையில் நடைபெற்ற இந்தக கூட்டத்தில் சபையின் உறுப்பினர் ம.மங்களநேசன் உரையாற்றும் போது மேற்படி கோரிக்கையை முன்வைத்தார்.

இந்தச் சிகிச்சை நிலையம் யாழ். நகரில் இயங்குவதால் சுகாதாரக் கேடு ஏற்படுகின்றது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

நீண்ட கால இடைவெளிக்குப் பின்பு இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு யாழ்.மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஆர்.தெய்வேந்திரன் கடந்த கூட்டங்களில் தான் கலந்து கொள்ளாதது பற்றி விளக்கமளித்தார்.

தொடர்ந்து நடைபெறும் சுகாதாரக்குழுக் கூட்டங்களுக்கு தான் சமுகமளிப்பதாகவும் மாநகர சபை கூட்டங்களுக்கு தமது சார்பில் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தைச் சேர்ந்த அதிகாரிகள் கலந்து கொள்வார்கள் என்றும் கூறினார்.

இக் கூட்டத்துக்கு தலைமை வகித்த கே.சின்னத்துரை உரையாற்றும்போது இரண்டாயிரத்து ஓராம் ஆண்டில் யாழ்.மாநகர சபையை நாம் உயர்ந்த நிலைக்கு கொண்டு வரவேண்டும்.

மாநகரசபையின் கௌரவ உறுப்பினர்கள் மக்களின் குறைகளை இனம் கண்டு அவற்றை தீர்த்து வைக்க முன்வரவேண்டும என்று கேட்டுக்கொண்டார்.

இந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களையும், உரையாடப்பட்ட விடயங்களையும் மாநகர சபையின் மாதாந்தக் கூட்டத்தில் சமர்ப்பிப்பதென முடிவுசெய்யப்பட்டது.(இ-5)

# நெடுந்தீவில் மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம்,டிசெ.15

யாழ்பல்கலைக்கழக சமூக மருத்துவத்துறையின் அனுசரணையுடன் மருத்துவபீட மாணவர்கள் ஏற்பாடு செய்துள்ள மருத்துவ முகாமும் சுகாதார விழிப்புத் தொடர்பான கருத்தரங்குகளும் இனறு முதல் மூன்று தினங்கள் நெடுந்தீவில் இடம்பெறவுள்ளன.

இந்த மருத்துவமுகாமின் போது ருபெல்லா தடுப்பூசி ஏற்றல்,சிறுவர்களின் போசாக்கு நிலையை அளவீடு செய்தல் மற்றும் சுகாதாரம் சம்பந்தமான கருத்தரங்குகளும் நாடகமும் இடம்பெறவுள்ளன.

நெடுந்தீவு பிரதேச சபை,நெடுந்தீவு பல நோ.கூ.சங்கம் மற்றும் உதவி அரசாங்க அதிபர் பணிமனை என்பன ஒன்றிணைந்து இந்த மருத்துவ முகாமுக்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளன.

நெடுந்தீவு மற்றும் ஊர்காவற்றுறைப் பகுதிகளுக்கான உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம் இந்த மருத்துவ முகாமுக்கான நெறிப்படுத்தலை மேற்கொள்வார். (இ-7)

### பரீட்சை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களப்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். பின்னர் கணவன் - மனைவியான பொதுமக்கள் இருவரும் உயிரிழந்தனர் என்று தகவல் நிலையம் மேலும் தெரிவித்தது.

இதற்கிடையில் - இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த வயோதிபத்தம்பதிகள் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறச் செல்வதற்காக பஸ்தரிப்பு நிலையத்தில் பஸ்ஸை எதிர்பார்த்திருந்த சமயம் கிளைமோர்த் தாக்குதலுக்கு இலக்காகினர் என மட்டக்களப்புச் செய்திகள் தெரிவித்தன. (இ-3-7-21)

### கப்பலில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தக் கோரிக்கையை முன்வைத்து பேச்சு நடத்தி முடிவு எட்டப்படும் வரை எந்த ஒரு வர்த்தகரும் யாழ்ப்பாணத்துக்கு பொருள் ஏற்றப்போவதில்லை - இப்படி அந்த தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கப்பல்களில் பொருள் ஏற்றுவதற்கு ஒரு மெற்றிக் தொன்னுக்கு கட்டணமாக 40 டொலர் அறவிடப்பட்டதாகவும் - தற்சமயம் அந்தக் கட்டணம் 80 டொலராக அதிகரித்துள்ளது என்றும் - வர்த்தகர்கள் தெரிவித்தனர். (இ-3)

# லங்கா முடித்த பயணிகளால் தவறவிடப்பட்ட பொருள்

## திருமலை பிரதேச செயலகத்தில்

யாழ்ப்பாணம்,டிசெ.15

திருகோணமலையில் இருந்து காங்கேசன்துறைக்கு கடந்த 11ஆம் திகதி வந்த 'லங்கா முடித்த' கப்பலில் பயணம் செய்த பயணிகள் சிலரால் தவறவிடப்பட்ட பொதிகள் திருகோணமலை பிரதேச செயலகத்தில் உள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தவறவிடப்பட்ட இந்தப் பொதிகள் திருகோணமலை பிரதேச செயலர் அலுவலகத்தில் உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளதாக யாழ். மேலதிக அரசாங்க அதிபர் து.வைத்திலிங்கம் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. யாழ். மாட்டின் வீதியைச் சேர்ந்த எம்.ஜே.அன்ரனி, வண்ணார்பண்ணையைச் சேர்ந்த நிமலினிதேவி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஜெயந்தன் ஆகியோரின் பொதிகளே உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

# பயணச்சீட்டு வழங்குவதில் ஈ.பி.டி.பிக்கோ அல்லது ஏனைய கட்சிகளுக்கோ முன்னுரிமை இல்லை

## ஜெகன் எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.15

வெளியிடங்களுக்கான கப்பல் மற்றும் விமான சேவைகளுக்கான பயணச் சீட்டு வழங்குவதில் ஈ.பி.டி.பியைச் சார்ந்தவர்களுக்கோ மற்றும் ஏனைய அரசியல் கட்சியை சேர்ந்தவர்களுக்கோ முன்னுரிமை வழங்கப்படமாட்டாது.

இப்படிக் கூறியுள்ளார் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே.வி.குகேந்திரன் (ஜெகன்).

வடமாகாண மீள் குடியமர்வு, புனர்வாழ்வு அதிகார சபையின் யாழ்.அலுவலகத்தில் பயண ஏற்பாடுகளை மேற்கொள்ள வந்திருந்த பொதுமக்கள் மத்தியில் பேசுகையில் அவர் இப்படிக் கூறினார்.

யாழ்.அரச அதிபர் க.சண்முகநாதனும் அச்சமயம் அங்கு வந்திருந்தார்.

சிகிச்சை பெறச் செல்பவருக்கும் மரணச் சடங்குகளுக்குச் செல்பவருக்குமே முன்னுரிமை வழங்கப்படும் என்று அவர் அங்கு மேலும் தெரிவித்தார். (இ-3-109)

### மத்திய கல்லூரி ஆண்டு 9 மாணவருக்கு!

யாழ்ப்பாணம்,டிசெ.15

யாழ்.மத்திய கல்லூரியில் ஆண்டு 9 இல் கல்வி கற்ற மாணவர்களை பரீட்சைத் திணைக்களத்தினால் சான்றிதழ் வழங்கப்படும் பரீட்சை விண்ணப்பப்படிவங்களில் கையொப்பமிடுவதற்காக எதிர்வரும் 18ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்குக் கல்லூரிக்குச் சமுகம் அளிக்குமாறு அதிபர் கேட்டுள்ளார். (இ-7)

### பல்கலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டன.

இராணுவ வாகனங்களின் அளவுக்கு மீறிய வேகத்தைக் குறைக்க வேண்டும் எனவும் தேவையற்ற வீதி விபத்துக்களைத் தடுக்க உரிய ஒழுங்குகளை செய்யவேண்டும் எனவும் கோரியே தாம் இந்தப் போராட்டத்தை நடத்தியதாக மாணவர்கள் சார்பில் தெரிவிக்கப்பட்டது (இ-7-6)

### படையினருக்கு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வத்தினருடைய பொறுப்பு, மனிதாபிமான பொறுப்புணர்வு, பெண்களுக்கெதிரான வன்முறை ஆகியன குறித்தும் பொலீஸாருக்கும் இராணுவத்தினருக்கும் பயிற்சி வழங்கப்போவதாகவும் - அமெரிக்கத் தூதரகம் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

### தியானம்

யாழ்ப்பாணம், டிசெ.15

யாழ். கொமிட்சியத்தின் கீழ் இயங்கிவரும் மரியாயின் சேனை அங்கத்தவர்களுக்கான ஒரு நாள் தியானம் நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலயத்தில் நடைபெறும்.

(ம-5)

### தமிழர்களின்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆயர் நோர்வேத் தூதரைக் கேட்டுக்கொண்டார்.

தெற்கில் அரசு மற்றும் எதிர்க் கட்சித் தலைவர்களையும் சந்தித்து, தற்போதைய நிலையைக் குழப்ப வேண்டாம் என்று கோரியுள்ளதாகவும் ஆயர் தெரிவித்தார்.

சமாதான முயற்சிகளுக்கு மனச்சுத்தியுடன் ஆதரவு வழங்க வேண்டும் என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவையும், விடுதலைப் புலிகள் தலைவர் வே.பிரபாகரனையும் கடிதம் மூலம் கேட்டுள்ளதாகவும் ஆயர் நோர்வேத் தூதுவரிடம் தெரிவித்தார்.

இதற்கு நோர்வேத் தூதுவர் பதிலளிக்கையில், தமது அரசு முன்னெடுத்துள்ள முயற்சிகளுக்கு சகல தரப்புக்களும் ஆதரவு வழங்க வேண்டும் என்றும் இந்த முயற்சியில் வெற்றி பெற்று சமாதானம் இந்த நாட்டில் ஏற்பட தமது பங்களிப்பை முழுமையாக வழங்குவதாகவும் தெரிவித்தார். (இ-3)


எமது ஒரிஜினல் பிரமிட் வீடியோ CD வெளியீடுகள்
✻ 16 வயதினிலே
✻ நாயகன்
✻ தேவர் மகன்
✻ மந்திரப் புன்னகை
✻ ஊமை விழிகள்
✻ அஞ்சலி
✻ கிழக்கு வாசல்
✻ நினைத்தாலே இனிக்கும்
✻ கல்யாண ராமன்
✻ கேளடி கண்மணி
✻ ஒன்ஸ்மோர்
✻ உன்னைச்சொல்லி குற்றமில்லை
✻ உழைத்து வாழ வேண்டும்
✻ உதய கீதம்
✻ என் தங்கச்சி படிச்சவ
✻ என் பொம்முக்குட்டி அம்மாவுக்கு
✻ பில்லா
✻ ஒரு தலை ராகம்
✻ விஷ்ணு
✻ நந்தவனத் தெரு
✻ நல்லவன்
✻ தர்மம் வெல்லும்
✻ சிந்துபைரவி
✻ அபூர்வ ராகங்கள்
✻ தங்க மகன்
✻ வேதம் புதிது
✻ உயிரிலே கலந்து
✪ புதிய, பழைய திரைப் படங்கள் Five Star, பிரமிட் CD க்களில் பெற்றுக்கொள்ளலாம்.
✪ ஆங்கில திரைப்பட CD க்களும் உண்டு.
I.T.N வீடியோ
27, கோயில் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
TP : 021-3123
(81703)



எமது ஒரிஜினல் வீடியோ CD வெளியீடுகள்
அம்மன்
ஏழு மலையான் மகிமை
நாக பந்தம்
ராஜ மலை சிம்மன்
பக்த ஹனுமான்
ஆயிரம் கண்ணுடையாள்
சம்பூர்ண ராமாயணம்
மாமனிதன் (கொப்பி)
சாம்ராட் (கொப்பி)
தாலிகட்டிய ராசா (கொப்பி)
நரேன் வீடியோ சென்ரர்
140, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். (C/14270)




ஷண்ணின் வீடியோ CD வெளியீடுகள்
பெருமளவு ஆங்கில வீடியோ CD க்கள் வந்து குவிந்துள்ளன.
(மலிவு விலையில்...)
ஷணி
24/2, பெரிய கடை, யாழ்.
(81713)



செய்மதி அன்ரனாக்கள் திருத்தல்
சகல இன செய்மதி (Satellite Antana) அன்ரனாக்கள் LNB, Receiver திருத்திக் கொடுக்கப்படும், பொருத்தியும் கொடுக்கப்படும்.
விவரங்களுக்கு:
Jaffna Technical Institute,
No.52/1 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(C/14283)



COMPUTER FOR SALES

அதி நவீன புதிய கணனிகள் மலிவு விலையில்
Pentium III, II
Scanners
Printers:
Dotmattrix
Lazer
Color
RAM
Monitor
I.B.M.S. 701, K.K.S. Road, Jaffna.
(C/14300)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 15.12.2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.